# கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு

## VI

**Kerala Reader - Tamil (AT)**

**Standard VI**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2016

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

---

***Prepared by***

State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2015, Reprint: 2016
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

**அன்புள்ள மாணவர்களே,**

தாய்மொழியாம் தமிழ்மொழி காலத்தால் மிகப் பழமையானது; தனிச்சிறப்பு மிக்கது. பழம்பெரும் உலக மொழிகளுக்கு இணையான இலக்கண இலக்கிய வளம் தமிழ்மொழிக்கு உண்டு. தமிழின் அடிப்படை அருமை பெருமைகளைத் தெரிந்துகொள்ளவும் தமிழ்மொழியைப் பல்வேறு நிலைகளில் கையாளுவதற்குரிய திறன்களைப் பெறுவதற்கும் ஏற்ற வண்ணம் இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாசித்தும் எழுதியும் சிந்தித்தும் செயல்பட்டும் நாம் அடையவேண்டிய அறிவையும் ஆற்றலையும் திறன்களையும் பெறுவோமாக.

வாழ்த்துகள்.

**முனைவர். பி.ஏ.பாத்திமா,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவனந்தபுரம்.

# Textbook Development Committee

## Tamil - VI (AT)

### *Members*

| | |
|---|---|
| Aji Prakash, M.H., | GHS, Koovakkadu, Kollam. |
| Balmani. J., | ALPS, Chunduvarai, Idukki. |
| Durairaj. S., | GUPS, Pambanar, Idukki. |
| Fathima Beegam. A.J., | GTHSS & TTI, Chalai, TVPM. |
| Geetha Kumari. K., | GHSS, Balaramapuram, TVPM. |
| Jayakumar. T.K., | GTHSS & TTI, Chalai, TVPM. |
| Kaleel Rahiman, A., | BGHSS, Vannamadai, Palakkad. |
| Manivannan, C., | GTLPS, Chalai, TVPM. |
| Mohanadoss. G., | GUPS, Vandiperiyar, Idukki. |
| Raju. V., | GUPS, Elappara, Idukki. |
| Sebastian. S., | GTUPS, Vanchivayal, Idukki. |

### *Experts*

| | |
|---|---|
| Dr. Gomathy Nayagam, E., | Guest Lr. University of Madras. |
| Dr. Nainar. M., | Reader (Rtd.), University College, TVPM. |
| Dr. Parasuraman, T., | Prof., PILC, Pondichery. |
| Dr. Rajaram, S., | Prof.,(Rtd.), Tamil University, Thanjavur. |
| Dr. Ratnasabapathy, P., | Prof.(Rtd.), Chennai. |
| Dr. Veerappan, P., | Prof., (Rtd.), NCERT, Mysore. |

### *Artists*

| | |
|---|---|
| Rakesh, P., Nair, | Artist, Neyyar Dam, TVPM. |

### *Academic Co-ordinator*

Dr. Sahaya Dhas, D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


பக்கம்

1. நந்தவனப்பூக்கள் ................................ 7 - 22
   - இயற்கைச் செல்வம் ................................ 8
   - மழை ................................ 12
   - எனது இலங்கைச் செலவு ................................ 19
2. ஒன்று படுவோம்! உயர்வோம்!! ................................ 23 - 42
   - எங்கள் பாரத தேசம் ................................ 24
   - சித்திரம் பேசுதடி ................................ 29
   - இந்திய நாடெங்கள் உடலே! ................................ 36
3. தமிழருவி ................................ 43 - 58
   - நீதி நூல்கள் ................................ 44
   - கவிதைப்படைப்புகள் ................................ 49
   - தூது சென்ற புலவர் ................................ 52
4. சின்னஞ்சிறு மலர்கள் ................................ 59 - 74
   - நண்பனே! நண்பனே!! ................................ 60
   - கைகள் எதற்குக் கண்மணியே ................................ 66
   - மனம் இருந்தால் மார்க்கம் உண்டு ................................ 70
5. வளம் தரும் வாழ்வு ................................ 75 - 94
   - ஆடம்பர ஆபத்து ................................ 76
   - நடைப்பயிற்சி நல்ல உடற்பயிற்சி ................................ 82
   - துள்ளி விளையாடலாம் ................................ 87

சொல்லகராதி ................................ 95 - 96

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பாகம் 4 அ

## இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலைமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

அலகு
1

# நந்தவனப் பூக்கள்

சிந்தனையும் இரசனையும் மனிதனுக்கு மட்டுமே இறைவன் அளித்த வரங்கள். அழகை இரசிக்கவும் வருணிக்கவும் இயல்கின்ற உயிரினம் மனிதனே. அவ்வண்ணமே இயற்கையையும் அதன் அழகையும் வருணிக்கும் கவிதைகளும் கட்டுரைகளும் இவ்வலகில் இடம் பெறுகின்றன. இரசிப்பதுடன் அந்த இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்துவதே இவ்வலகின் நோக்கம்.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- இயற்கை வருணனைக் கவிதைகளுக்கு இரசனைக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- படைப்புகளை வாசித்து, உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டு கருத்துகளைத் தொகுத்து எழுதுகிறார்கள்.
- வருணனைக் கவிதைகளை வாசித்து இராக, தாளத்துடன் மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- வெவ்வேறு கவிஞர்களின் படைப்புகளை ஒப்பீடுசெய்கிறார்கள்.
- வாசித்த கவிதை, கட்டுரை இவற்றிலிருந்து வருணனைக் குறிப்பு தயார் செய்கிறார்கள், எழுதுகிறார்கள்.

# இயற்கைச் செல்வம்

அலகு 1

விரிந்த வானே, வெளியே – எங்கும்
விளைந்த பொருளின் முதலே
திரிந்த காற்றும் புனலும் – மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்!
தெரிந்த கதிரும் நிலவும் – பலவாய்ச்
செறிந்த உலகின் வித்தே
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!

அசைவைச் செய்தாய், ஆங்கே – ஒலியாம்
அலையைச் செய்தாய் நீயே!
நசையால் காணும் வண்ணம்– நிலமே
நான்காய் விரியச் செய்தாய்!
பசையாம் பொருள்கள் செய்தாய் – இயலாம்
பைந்தமிழ் பேசச் செய்தாய்
இசையாம் தமிழைத் தந்தாய் – பறவை
ஏந்திழை இனிமைக் குரலால்!

எல்லாம் அசையச் செய்தாய் – உயிர்கள்
எதினும் அசைவைச் சேர்த்தாய்!
சொல்லால் இசையால் இன்பம் – எமையே
துய்க்கச் செய்தாய் அடடா!
கல்லா மயில் வான் கோழி – புறவுகள்
காட்டும் சுவைசேர் அசைவால்
அல்லல் விலக்கும் ஆடல் – கலை தான்
அமையச் செய்தாய் வாழி!



– **பாவேந்தர் பாரதிதாசன்**

## பாவேந்தர் பாரதிதாசன்



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 1891 ஏப்ரல் 29 ஆம் தேதி புதுவையில் பிறந்தார். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம். தந்தை பெயர் கனகசபை, தாயார் இலக்குமி. இவரது கவிதைகள் மக்களிடையே மாபெரும் சிறப்பைப் பெற்றன. மகாகவி பாரதிக்குப் பின் பிற கவிஞர்கள் பெறாத பெரும் புகழைப் பெற்றவர். பாவேந்தர், புரட்சிக் கவி என்று அழைக்கப்பட்டவர். தமிழ் எங்கள் உயிர் என்று சொல்லிய முதல் கவிஞர் பாரதிதாசன் தான். அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு போன்றவை புகழ் பெற்ற நூல்களாகும். 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் பாவேந்தர் இயற்கை எய்தினார்.



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டுடன் பாடுங்கள்.
- இப்பாடலில் பிடித்த வரிகள் எவை? ஏன்?
- ஒரே ஓசை தரும் சொற்களை இப்பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.
  (எ.கா.) விரிந்த – தெரிந்த
- இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுங்கள்.
- இப்பாடலில் பாவேந்தர் கூறும் இயற்கையின் செல்வங்கள் எவை? தொகுத்து எழுதுங்கள்.

**விண்ணக மெங்கும் விளங்கிப் பரந்து**
**விரையும் கருமுகிலே! – நீயும்**
**மண்ணக மெங்கும் புஞ்செய்களை மட்டும்**
**மதிக்கத் தவறுகிறாய்!**
**ஏழை குடித்திடுங் கூழுக்கு வேண்டி**
**யிருப்பது புஞ்சை நிலம்! – சொந்த**
**மேழி பிடித்தன்றி வாழக்கற் காமல்**
**மெலிந்த உழவனவன்!**

- கவிஞர் வெள்ளியங்காட்டான் எழுதிய கவிதை வரிகளை வாசித்தீர்கள் அல்லவா? இக் கவிதையைப் பாவேந்தரின் இயற்கைச் செல்வம் கவிதையுடன் ஒப்பிட்டு எழுதுங்கள்.

அலகு 1

# வானம் எனும் வீதியிலே

– நெல்லை.சு.முத்து

**அமுதா** : வானம் எத்தனை அற்புதமானது! அதிலும் நீல வானத்தின் அழகே! அழகு !

**கண்ணன்** : என்ன ஒரே அடியா இயற்கையிலே மூழ்கிட்டீங்க?

**அமுதா** : அதெல்லாம் ஒண்ணுமில்ல. நாம பார்க்கும் ஆகாயம் பகலில் ஒரு தோற்றம். இரவில் ஒரு தோற்றம்

**கண்ணன்** : ஆமாம்! வானத்தின் அருமை பெருமைகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமே!

**அமுதா** : பகலில் ஒரே ஒரு சூரியன் மட்டும் தான் உதிக்கிறது. பூமியில் வெயில் அடித்து நொறுக்குகிறது. ஆனால் இரவிலோ எத்தனையோ ஒளிமிக்க நட்சத்திரங்கள் ஜொலித்தும் கூட இரவு வானம் ஏன் இருட்டாக இருக்கிறது.?

**கண்ணன்** : வானத்திலுள்ள நட்சத்திரங்கள் சூரியனைப் போலப் பூமியின் அருகில் இல்லை. அவை பல லட்சம் கோடி கிலோமீட்டர் தொலைவில் அல்லவா இருக்கின்றன.





அலகு 1

**அமுதா** : சரி! சூரியக் குடும்பம் பற்றிச் சொல் பார்க்கலாம்.

**கண்ணன்** : சூரியனைச் சுற்றி எட்டுக் கோள்களே உள்ளன.

**அமுதா** : சூரியனைச் சுற்றிவருவது எல்லாம் கோள்கள் தானே? அவை வெறும் பனித் தூளும், அமோனியா போன்ற வாயுக்களும்தான். அவற்றைத் தூமகேது என்பார்கள்.

**கண்ணன்** : புகைக் கொடி என்று சங்க இலக்கியத்தில் சொல்லப்படுவது இந்தத் தூமகேது தானா?

**அமுதா** : அடிச் சக்கேனா! தமிழ் இலக்கியத்திலும் வானவியல் இருக்கின்றதா? பாரட்டுக்குரியது. சரி கோள்களில் மிகப் பெரிய கோள் எது?

**கண்ணன்** : வியாழன்



**அமுதா** : அப்படியென்றால் மிகச் சிறிய கோள்?

**கண்ணன்** : புதன்

**அமுதா** : பூமியின் அண்டை கிரகங்கள் எவை?

**கண்ணன்** : புதனும், செவ்வாயும்

**அமுதா** : ஓ...! அதுதான் செவ்வாய்க்கு நமது இந்திய விஞ்ஞானிகள் செயற்கைக்கோள் அனுப்பினார்களோ!

**கண்ணன்** : ஆமாம்! மங்கள்யான் என்னும் செயற்கைக்கோள் அனுப்பி இந்தியா உலக வரலாறு படைத்துள்ளது.

**அமுதா** : அப்போ! இனி நாம் செவ்வாயிலும் குடியேறலாம் அப்படித்தானே!

**கண்ணன்** : ஆமாம் சூரியக் குடும்பத்தில் பூமிக்கு அடுத்தபடியாகச் செவ்வாய் தான் மனிதனை வரவேற்கச் செம்பட்டு விரித்துக் காத்திருக்கிற கிரகம்.



## செயல்பாடுகள்

- வானின் விந்தைகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சி பற்றிய தகவல்களைத் தொகுத்துப் பத்திரிகைச் செய்தி தயாரியுங்கள்.

# மழை

நான் என்ன செய்வேன்! என்னால் இயன்ற அளவு ஊட்டம் கொடுத்தேன் – இனி என்னிடம் என்ன இருக்கிறது; உங்களுக்குத் தர! நான் வறண்டு விட்டேன் – நீங்கள் காய்ந்து போகிறீர்கள்! உங்கள் நிலை கண்டு, என் நெஞ்சம், பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கிறது! என்னை நம்பிப் பயனில்லை – நான் வறண்டு கிடக்கிறேன்!! – என்று கூறுவது போலத் தோற்றம் பெற்ற பூமிக்கு, புதுப் பொலிவு தருகிறது மழை! வாடிய செடி கொடிகளுக்கு நீரூட்ட முடியும் இனி!



சாய்ந்து கிடந்தவை அனைத்தும் இனி நிமிர்ந்து நின்றிடும்!

வலிவற்றுப் போனவைகளெல்லாம் இனி ஆடி மகிழ்ந்திடும்!

பட்டுப்போக இருந்தவைகளெல்லாம், துளிர்விடுகின்றன. பசுமை! வளம்! பாங்கு! எங்கும்!! ஏங்கிக்கிடந்தவையாவும் எழில் குலுங்கும் புது நிலை பெற்றுவிட்டன - மங்கி மடிய இருந்த அனைத்தையும் மழை மகிழ்ச்சி பொங்கிடும் நிலைக்குக் கொணர்ந்து விட்டது.

இத்தனை அழகு இதுநாள்வரை எங்கு மறைந்திருந்தது! கோலம் கண்டு களிப்படையாதார் எவர்! எனினும் நேற்றுவரை சோர்ந்து கிடந்தனவே!!

மாமருந்தோ, மழை!

வானளித்த விருந்தோ!

வாழ்வளிக்கும், வள்ளலோ, மழை!!

ஓவியனைக் கூவி அழைத்து, உன் திறமனைத்தும் காட்டிட வாய்ப்பு இதோ! வண்ணம் வகைவகையாக! வடிவம் பலப்பலவாக! எண்ணம் பல கொண்டிருந்திருப்பாய், எழில் குறித்து, இங்குக் காண்பாய், எழிலின் வகையும் வடிவமும்!

இச்சை கொள்ளச் செய்யும் பச்சை.

இடையிடையே வெட்கத்துடன் நிற்கும் வேல் விழியாள் முகம்போன்ற சிகப்பு - சின்னஞ் சிறு மலராகிச் சிரித்தபடி இருத்தல் காண்பாய்.

தங்க இடமின்றித் தவித்த புள்ளினங்கள், எங்கும் வட்டமிட, இசைபலவும் எழுப்பிடும் சோலை அழகு காண்பாய்! இஃது மழை காணாதபோது, பாலை எனக் கிடந்தது; பாங்கு பெற்றது மழையதனால் அறிந்திடுவாய்.

வளம் பொங்கி வழிந்திடுது, வாய்க்கால் எனும் பெயரால்!

வட்டிலில் வடித்த தேனைத் தொட்டு வாயிடை இட்டு மகிழ்ந்திடும் பான்மைபோல, சின்னஞ்சிறு பறவை இனம், சீர் பருகி நிற்பது பார்!

என்ன இனி வேண்டும், நின் எண்ணம், வடிவம் பெற!

நீலநிறம் மேலே! ஆங்கு நீந்திடும் வெண்முகிலும்! கீழே பச்சை!

அதில் பல வண்ணம், பல வடிவு! அவை மலர்!!

ஏற்றம் இறைப்போர்க்கு, இல்லை இடுப்புவலி! என்செய்வோம், பயிரில்லை எனும் பேச்சுக்கு இடமில்லை!

மாமழைதான் பெய்தது, மாறிற்று சோகநிலை!

**- பேரறிஞர் அண்ணா**

## பேரறிஞர் அண்ணா



இவருடைய இயற்பெயர் அண்ணாதுரை. தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்தவர். சிறந்த அரசியல்மேதை, மனிதநேயம் மிக்கவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாளர், இவர் எழுத்தாளராகவும் இதழாசிரியராகவும் புகழ் பெற்றவர். சிறுகதை, புதினம், நாடகம், திரைக்கதை எனப் பல துறைகளிலும் படைப்புகள் பல தந்தவர். தன்மான இயக்கத்தை வளர்த்தவர். சீர்திருத்தச் சிந்தனை கொண்டவர்.





### செயல்பாடுகள்

- இந்த வர்ணனைக் கட்டுரையில் உங்களுக்குப் பிடித்த வரிகளை எழுதுங்கள்.
- பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய தகவல்களைத் திரட்டுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களுக்குச் சொல்லகராதி பார்த்துப் பொருள் கண்டுபிடியுங்கள்.

  இயன்ற அளவு, வறண்டு, பொலிவு, எழில், மடிதல், பாங்கு, இச்சை, களிப்படைதல், கொற்றம், ஏற்றம், பொழிதல், புள்ளினங்கள், சோலை, தெங்கு, நுங்கு, கிள்ளை

- மழை வந்தால் ஏற்படும் மாற்றங்கள் எவை?
- மழை அதிகமானால் ஏற்படும் விளைவுகள் எவை?
- எழில், இச்சை, இயன்றளவு – இச்சொற்களைப் பயன்படுத்தி ஒரு நிகழ்வு எழுதுங்கள்.
- நீங்கள் மழையில் நனைந்த நிகழ்ச்சியை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- மழை இல்லையேல் ஏற்படும் விளைவுகள் எவை என்று எழுதுங்கள்.
- மழை இல்லாமலிருந்தபோதும் மழை பெய்தபோதும் பூமி எவ்வாறு தோற்றமளிப்பதாகப் பேரறிஞர் அண்ணா கூறுகிறார்?

# நீ எங்கே?

மேகத்துள் உறைபவளே!
மின்னல் மழை பொழிபவளே!
இடிமுழக்கம் செய்பவளே!
இன்னும் ஏன் வரவில்லை!

வாய்பேசா எருதுகளும்
வாழவழி இல்லாமல்
வாய்திறந்து உன்னைத்தான்
அம்மா என்றழைக்கிறது.

அழுகுரலும் விழவில்லையோ?
அன்புமனம் உனக்கில்லையோ?
இறங்கி வந்து பொழிவதற்கு
இன்னும் மனம் வரவில்லையோ?



எப்பொழுது செவிடானாய்?
ஏதுபிழை நானறியேன்!
இடிமுழக்கம் கேட்கலையே!
ஊமையாயப் போனாயோ?

கடல்நீரைக் குடித்தும் நீ!
கருவுறவே காணோமே!
மனம் மாறிப் போனாயோ!
மழையேதும் பிறக்கலையே!

- குழ.கதிரேசன்





## செயல்பாடுகள்

- கவிஞர் மழையை எவ்வாறெல்லாம் அழைக்கிறார்?
- மழை உரிய காலத்தில் பெய்யாவிட்டால் என்னென்ன நிகழும்? கவிஞரின் கருத்துகளுடன் உங்கள் கருத்துகளையும் இணைத்து எழுதுங்கள்.

# மண்ணில் பொழியும் மாமழையே

மேகமாய் விண்ணதில் மேவிடுவாய் - என்றும்
மேதினி மீதினில் பொழிந்திடுவாய்
தாகம் தணிவதும் உன் துணையால் - இந்தத்
தாரணி வாழ்வதும் உன்னருளால்

கங்கை ஒழுகுவது உன்னாலே - எங்கள்
காவிரி பாய்வதும் உன்னாலே
பொங்கிடும் தாமிர வருணியென்போம் - உன்னைப்
போற்றிப் புகழ்ந்து வணங்கிடுவோம்

சித்திரைப் பத்தினில் வித்திடவே
சீருடன் உன்னளி எண்ணுவரே
இத்தரை வாழ்பவர் இன்பமெலாம் - உன்றன்
ஈடில்லா வன்மையின் தன்மையம்மா

சற்று நீ கோபமே கொள்வாயெனில் - இந்தச்
சகத்தினில் துன்பங்கள் விளைந்திடுமே
பற்றுடன் நீ செய்யும் பணிகளினால் - இந்தப்
பாரினில் இன்பங்கள் பொங்குமம்மா

உண்ணும் உணவும் நீயன்றோ அதை
உண்ணத் துணையும் நீயன்றோ
மண்ணில் பொழியும் மாமழையே
மகிழ் புனல் நீந்திடச் செய்வாயே



- இ.குற்றாலம் பிள்ளை



## செயல்பாடுகள்

- பாடலுக்கு ஏற்ற மெட்டமைத்துக் குழுவாகப் பாடுங்கள்.
- ஒத்த ஓசை தரும் சொற்கள் எவை?
- இப்பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன்?
- மழையைக் கவிஞர் எவ்வாறெல்லாம் பாராட்டுகிறார்?
- கீழ்வரும் சொற்களின் பொருளைச் சொல்லகராதி பார்த்துக் கண்டுபிடித்து அகர வரிசைப்படுத்துங்கள்.

  மேதினி, பொழிதல், தாரணி, ஈடில்லா, வன்மை, சகம், பார், புனல்
- உலகத்தைக் குறிப்பிடும் வெவ்வேறு சொற்கள் எவை?

# மழையும் மானிடமும்

- அ.சிவசுப்பிரமணியம்

ஒரு நாட்டின் அடிப்படை வளங்களில் நீர்வளமும் ஒன்று. உலகின் தொன்மை நாகரிகங்கள் யாவும் நீர்வளம் நிரம்பிய பகுதிகளில்தான் உருவாயின. உயிர் வாழ மிகவும் அடிப்படையான தேவைகளுள் ஒன்றான தண்ணீரைக் கிணறு, குளம், ஏரி, ஆறு எனப் பல நீர் நிலைகள் மூலம் மனிதன் பெற்றுக் கொள்கிறான் என்றாலும் இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது விண்ணிலிருந்து விழும் மழை தான். எனவேதான் இளங்கோவடிகளும் சிலப்பதிகார மங்கல வாழ்த்தில்,

"மாமழை போற்றுதும் மாமழை போற்றதும்"

என்று மழையினைப் போற்றுகின்றார். வள்ளுவரும்,

'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று'

என்று சாவா மருந்து எனக் கூறப்படும் அமுதத்திற்கு நிகராக மழையினைக் குறிக்கிறார்.

உலகை வாழ வைக்கும் மழையை ஆவலுடன் எதிர் நோக்குபவர்கள் உலகிற்கு அச்சாணியாக விளங்கும் உழவர் பெருமக்கள் தான். அவர்களின் உழைப்பைப் பயனுடையதாக்குவது மழைதாம். தேவையான அளவு பெய்யும் மழை பயிர்களைச் செழிக்கச் செய்து அவர்களின் வாழ்வை வளப்படுத்துகிறது. எனவே உழவர்களின் வாழ்வில் மழை இன்றியமையாததாகும். மழையைக் குறித்து உழவர்களுக்கிடையே பல நம்பிக்கைகளும் சடங்குகளும் உள்ளன.

நீண்ட காலமாக மழை பெய்யாது வாழ்வில் துயர்மிகும் காலங்களில் உழவர்கள் மழைக் கஞ்சி காய்ச்சுதல் என்னும் சடங்கைக் கிராமப் பகுதிகளில் நடத்துகிறார்கள். கிராமத்திலுள்ள பெண்கள் எல்லோரும் சென்று தானியங்களைப் பிச்சையாக ஏற்பார்கள். அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து மாவாக அரைத்து





உப்பிடாது கஞ்சியாகக் காய்ச்சுவார்கள். அந்த உப்பில்லாத கஞ்சியைக் கிராமத்தார் அனைவரும் குடித்து முடித்தவுடன் பெண்கள் தங்கள் குழந்தைகளை எடுத்துக் கொண்டு தேசாந்திரம் போவதாகக் கூறிப் புறப்படுவார்கள். அவ்வாறு புறப்படும்போது மழையின்றித் தாங்கள் படும் துயரங்களை ஒப்பாரியாகப் பாடுவார்கள்.

பூமியை நம்பியல்லோ
ஐயோ வருணதேவா
நாத்து நட்டுவிட்டோம்
ஐயோ வருணதேவா
பூமி செழிக்கவில்லை
ஐயோ வருணதேவா

என்னும் பாடலைப் புலம்பிக் கொண்டு தேசாந்திரம் போகும் பெண்களைப் பெருநிலக்கிழார் தடுத்தி நிறுத்தி,

சேரைப் பிரித்து தாரேன்
சீராட்டுப் போவாதீங்க
சீமைச் செழித்து விடும்
செல்ல மழை பெய்துவிடும்
நாடு செழித்து விடும்
நல்ல மழை பெய்துவிடும்

என்று கூறுவார்கள். இவ்வாறு நடக்கும்போது மழை பெய்யுமென்று நம்புகிறார்கள்.





## செயல்பாடுகள்

- நாட்டின் அடிப்படை வளம் எது? ஏன்?
- மழையைத் திருவள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
- உழவர்களின் வாழ்வை மழை எவ்வாறு வளப்படுத்துகிறது?
- மழை பெய்வதற்காக உழவர்கள் நடத்தும் வேறு நம்பிக்கை நிகழ்வுகள் எவை? தகவல்களைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள்
- மழை நீண்ட காலம் பெய்யாதிருந்தால் ஏற்படும் துயரங்கள் எவை?
- மழை பெய்ய நாம் செய்ய வேண்டியவை எவை?
- ‘உலகின் அச்சாணி உழவர்கள்’ இக்கூற்றை வலியுறுத்திக் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.

# எனது இலங்கைச் செலவு

– திரு.வி.க.

இலங்கைச் செலவு என்னும் தலைப்பை நோக்கியதும் சிலர் இலங்கைக்குச் சென்று திரும்பியதற்கு நேர்ந்த செலவு என்று நினைக்கலாம். பண்டைத் தமிழ் நூல்களில் பயணம் என்ற சொல்லுக்குப் பதிலாகச் செலவு என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டது.

எனது இலங்கைச் செலவு எனும் கட்டுரையில் எனது புறப்பாடு, இருக்கை, வரவேற்பு முதலியவற்றை நான் முறையாகத் தொகுத்துக் கூறப்போவதில்லை. ஆனால் நான் கண்ட தோற்றங்களுள் சிலவற்றை இங்குக் கூற வேண்டும் என்பதே எனது ஆவல்.

கொழும்பினின்றும் கண்டிக்குப் புறப்பட்டோம். எம்மை வழிகூட்டி அனுப்பப் போந்த அன்பர்களோடு நாங்கள் பேசிக்கொண்டிருந்தமையான், எங்கட்குச் செயற்கை வெம்மை புலனாகாமலிருந்தது. வண்டி புறப்பட்டதும் அவ்வெம்மைக் கடுமை வருத்தத் தொடங்கிற்று. சிறிது நேரத்துக்குள் இயற்கையன்னை காட்சி வழங்கினாள். அவ்வழியின் இயற்கை வளத்தை என்னென்று சொல்வேன்! ஸ்ரீநகர், தார்ஜிலிங், ஆல்ப்ஸ் முதலிய இடங்களிலுள்ள இயற்கை வளங்களைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன்; நூல்கள் வாயிலாகப் படித்தும் இருக்கிறேன். நேரே கண்டதில்லை. கண்டிக்குச் செல்லும் வழி நெடுக இயற்கை அன்னையின் திருவோலக்கம் அன்றி, வேறென்ன இருக்கிறது! எங்கணும் மலைகள் – மலைத் தொடர்கள் – மலைச் செடிகள் – பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள் – ஆறுகள் –





நீர் நிலைகள் - இவை யாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்குங்காட்சியன்றோ கடவுள் காட்சி! நூற்றுக்கணக்கான குற்றாலங்கள் நூற்றுக்கணக்கான பாபநாசங்கள் - ஆண்டுள்ளன. மலைகள் எத்துணை எத்துணை விதமாகக் காட்சி வழங்குகின்றன! சில இடங்களில் மலைகள் நிற்கும் தோற்றம் இயற்கை ஊசல் போல விளங்கிற்று. சில இடங்களில் மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாயவருந் தோற்றத்தை வழங்கிக் கொண்டு நிற்கின்றன. சில இடங்களில் அவை செய்கரைப்போல் நேர்மையாக நிற்கின்றன. பசுமை நிலவாத மலைப்பாங்கரே காணோம். தெங்கும் கமுகும் ரப்பர் மரங்களும் ஒரு பெரும் பசுங்கடல் பொங்கி வருதல் போல் காணப்படுகின்றன. சில இடங்களில் நானாபக்கங்களிலும் மலைசூழ்ந்து நிற்ப, அவைகளினின்றும் பொழியும் அருவி அவைகளினடியில் நீராண் என ஓடித்திகழ, நடுவண் பச்சைப் பசேலென வான்பயிர் தலையசைத்து நிற்கும் அழகைக் கண்டு கண்டு உவந்தேன், புதிய மலைச்சோலைகளைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் இயற்கை இன்ப வாழ்வு உள்ளத்தில் தோற்றமுறா நிற்கும்.

இப்பொழுது ஏரோப்பியத் தோட்டக்காரர்களும் மற்றவர்களும் இப்பசுங்காடுகளைப் பண்படுத்திப் பொருளீட்டுந்துறை கண்டிருக்கிறார்கள். நம் முன்னோர்கள் அவ்வியற்கை நிலையங்களிடையே வாழ்ந்து, இயற்கையின் வாயிலாக இறைவனைக் காணும் எளிய வாழ்வு நடத்தினார்கள். பசுமை பொங்கும் மலைகளைப் பார்த்துக்கொண்டே கண்டி சேர்ந்தோம், நிலையத்தருகே கண்டித்தமிழ் மக்கள் அன்போடு எம்மை வரவேற்றார்கள். நாங்கள் 'தமிழக' நிலையத்தில் தங்கியிருந்தோம். ஆங்குச் 'சைவம்', 'தமிழ் வரலாறு' என்னும் இரண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஆங்குள்ள தமிழர்கள் தமிழ் மனத்தோடு எங்களோடு உறவாடினார்கள்.



## திரு.வி.கலியாணசுந்தரனார்



**பெயர்** : திரு. வி. கலியாணசுந்தரனார்

**பெற்றோர்** : விருத்தாலனார் - சின்னம்மையார்

**பிறந்த ஊர்** : காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள துள்ளம்

**சிறப்பு** : இவர் தொழிலாளர் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டு மேடைத் தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர். தமிழ்த் தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர்.

**படைப்புகள்** : மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்த் தென்றல், உரிமை வேட்கை

**காலம்** : 26.08.1883 - 17.09.1953



### செயல்பாடுகள்

- திரு.வி.க பற்றிய தகவல்களைத் திரட்டித் தொகுத்து எழுதுங்கள்.
- மலைகளையும் காடுகளையும் திரு.வி.க எவ்வாறு வருணிக்கிறார்?
- திரு.வி.க தனது பயணக்கட்டுரையில் இயற்கைக் காட்சிகளை எவ்வாறெல்லாம் வருணிக்கிறார்?
- இப்பயணக் கட்டுரையிலிருந்து இயற்கையை வருணிக்கும் வாக்கியங்களை எடுத்து எழுதுங்கள்.
- நீங்கள் சென்ற பயண அனுபவத்தை அடிப்படையாக்கி ஒரு பயணக் குறிப்பு எழுதுங்கள்.
- வருணனை வாக்கியங்கள் எழுதுங்கள்

  எ.கா. மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாய வருந்தோற்றம்போல்
- கீழ்வரும் சொற்களின் பொருளைச் சொல்லகராதி பார்த்துக் கண்டுபிடியுங்கள்.

  செலவு, வெம்மை, புலனாதல், பைங்கூழ்கள், நடுவண், உவந்தேன்

## சுட்டெழுத்துகள்

"யார் இதை உடைத்தது?"

"இவன் தான் உடைத்தான்"

இல்லை, 'அவன்' தான் உடைத்தான்

இது போன்ற உரையாடல்களை நாம் அடிக்கடி கேட்கிறோம்.

அவன், அவள், அவர், இவன், இவள், இவர், அது, இது, அவை, இவை என்னும் சொற்கள் குறிப்பிட்ட மனிதரையோ, பொருட்களையோ சுட்டிக் காட்ட உதவும். இவ்வாறு சுட்டிக்காட்ட உதவும் எழுத்துகள் இரண்டு.

அந்த எழுத்துகள் அ, இ

இந்த எழுத்துகள் தான் சுட்டெழுத்துகள் என அழைக்கப்படுகின்றன.
முன்பு உ என்பதும் சுட்டெழுத்து என அழைக்கப்பட்டது.

'உப்பக்கம்' என்றால் 'முதுகுப்பக்கம்' என்று பொருள்.

அதுபோல "உம்பர்" என்றால் மேலே என்பது ஆகும்.

அவன், இவன், அது, இது என்று சுட்டிக்காட்டுவது ஒரு வகை.

அப்பையன், இப்பெண், இப்பள்ளிக்கூடம்

என்று சுட்டிக்காட்டுவது மற்றொரு முறை.

இதில் என்ன வேறுபாடு உள்ளது?

அவன், இவள், அது என்று சுட்டிக்காட்டிக் கூறும்போது அந்தச் சொற்கள் ஆணா, பெண்ணா, ஒரு பொருளா என்பதையும் சேர்த்தே சுட்டிக் காட்டுகின்றன.

அ, இ என்ற எழுத்துகள் சுட்டிக்காட்டும் போது ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைத்தையும் பொதுவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

*சுட்டுச் சொற்கள் அமைத்து விடை எழுதுங்கள்.*

1. எது உன் வகுப்பறை?

   . . . . . . . . . . . . . . . என் வகுப்பறை

2. யார் உனது தங்கை?

   . . . . . . . . . . . . . . . எனது தங்கை.

3. எந்தப் பக்கம் உன் வீடு உள்ளது?

   . . . . . . . . . . . . . . . என் வீடு உள்ளது.

அலகு

2

# ஒன்றுபடுவோம்! உயர்வோம்!!

மதம், இனம், மொழி போன்றவற்றால் எத்தனையோ பிரிவுகள் இருப்பினும் நாம் இந்தியர் என்ற உணர்வுடன் செயல்பட்டால் மட்டுமே நம்மால் உலக அரங்கில் ஒளி வீச முடியும். இக்கருத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதே இவ்வலகு. ஒருமைப்பாட்டு உணர்வை இளம் பருவத்திலேயே மாணவர்களிடம் வளரச் செய்வதே இதன் நோக்கம்.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- கருத்துச் செறிவுடனும் சரியான உச்சரிப்புடனும் வேகமாக வாசிக்கிறார்கள்.
- கதைகளை வாசித்துப் பாத்திரப் படைப்புகளின் தனித்தன்மையைக் கண்டுபிடித்து எழுதுகிறார்கள்.
- பல்வேறு விதமான கடித அமைப்புகளைப் புரிந்து கொண்டு கடிதங்கள் எழுதுகிறார்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டுப் பாடல்களை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- கருத்துகளின் அடிப்படையில் பாடல்களை ஒப்பீடு செய்து ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- கருத்துகளின் அடிப்படையில் பாடல் வரிகளை நிறைவு செய்து எழுதுகிறார்கள்.
- படைப்புகளை வாசித்து, நூல்குறிப்பு எழுதுகிறார்கள்.
- தகவல்களின் அடிப்படையில் படச்சேகரிப்பு நடத்துகிறார்கள்.

# எங்கள் பாரத தேசம்

வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் - அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்குவோம் - எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்

சிங்களத் தீவினுக்கோர் பாலமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம்

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்



கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்.

காவியம் செய்வோம் நல்ல காடுவளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்தும் உவந்துசெய்வோம்

— சுப்பிரமணிய பாரதியார்



### சுப்பிரமணிய பாரதியார்



இவரது இயற்பெயர் சுப்பையா (எ) சுப்பிரமணியன். இவர் 1882 டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் எட்டயபுரத்தில் பிறந்தார். பாரதி, கவிஞர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், விடுதலைப் போராட்ட வீரர், சமூகச் சீர்திருத்தவாதி எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு முதலியவை இவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள் ஆகும். இவரது கவித்திறனைப் பாராட்டி எட்டயபுர மன்னர் பாரதி என்ற பட்டத்தை அளித்தார். 1921 செப்டம்பர் 11ஆம் நாள் இவர் இயற்கை எய்தினார்.



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டுடன் பாடுங்கள்.
- பாடலில் உங்களுக்குப் பிடித்த வரி எது, ஏன்? எழுதுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பாடலில் பாரதியார் செய்வதாகக் கூறும் செயல்கள் எவை? - கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- கவிதை வரிகளை முழுமையாக்குங்கள்.

  நாட்டிற்காக உழைத்திடுவோம் - நன்மை
  பலவும் செய்திடுவோம்
  நாடு நலமாய் இருந்தால் தான் - நன்மை
  பலவும் சேர்ந்திடுமே.

  ..............................................................................................
  ..............................................................................................
  ..............................................................................................
  ..............................................................................................

- எங்கள் அன்னை எங்கள் நாடு எங்கள் மக்கள் வாழ்கவே
  இன்பத் தமிழ்வளர்த்த தங்கத் தமிழ் வாழ்கவே
  சிங்கமென் றிலங்கை வென்ற தென்னகத்தார் வாழ்கவே
  செம்மை அன்பு பண்புமிக்க செல்ல மக்கள் வாழ்கவே

  காடுவெட்டி நாடுகண்ட கைகளோங்கி வாழ்கவே
  கள்ளமற்ற உள்ளம் பெற்ற கன்னிமக்கள் வாழ்கவே
  ஏழுநூறு கவிதை கோடி எழுதிவைத்த புலவரும்
  இளைய மாதர் கலையுளாரும் இனிது வாழ்க! வாழ்கவே!

  **இப்பாடலைப் பாரத தேசம் பாடலோடு ஒப்பிட்டு எழுதுங்கள்.**



# என் செல்ல மகளுக்கு...

இந்தியாவின் முதல் பிரதமரான **'ஜவஹர்லால் நேரு'** சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைச் சாலையில் இருந்தபோது தனது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி.

அல்மோரா மாவட்டச் சிறைச்சாலை,

1935 பிப்ரவரி 22

**செல்ல மகள் இந்து!**

சிறைச்சாலையில் நான் நலமாக இருக்கிறேன். கிருபாளினியின் உதவியுடன் படிக்க வேண்டிய பாடங்களை நீ முடிவு செய்து விட்டாய் போலும், மகிழ்ச்சி. இப்படிப் பேராசிரியர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கலந்துரையாடுவது நல்லது. வகுப்பில் உட்கார்ந்து பாடங்களைக் கேட்பதைவிட இந்த அணுகுமுறை நல்லது.

நீ படிக்கும் சாந்திநிகேதனில் இத்தகைய நடைமுறை இருக்கிறதா என்பது தெரியவில்லை; இல்லாவிட்டால் என்ன? ஆசிரியர்களைத் தனியே சந்தித்து உரையாடும் பழக்கத்தை நீ கடைப்பிடி.

நீ வாசிப்பதற்காக அவ்வப்போது புத்தகங்களை நான் அனுப்பலாமா எனக் கேட்டிருந்தேன்; நீயும் அனுப்பச் சொல்லி எழுதி இருக்கிறாய். இப்போது எனக்குள் திகைப்பு என்னவென்றால், உனக்கு எப்படிப்பட்ட புத்தகங்களை அனுப்புவது என்பதுதான்.

புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது; கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படிச் செய்தால், புத்தக வாசிப்பு மகிழ்ச்சியைத் தராது. வெறுப்பை உண்டாக்கும். அதுமட்டும் அன்று; எந்தப் புத்தகத்தையும் வாசிக்க ஆசை வராது. முன்பு எல்லாம் நம்முடைய பாடப் புத்தகங்களும் தேர்வுகளும் இப்படி வெறுப்பு உண்டாக்கும் விளைவைத்தான் செய்தன. சேக்ஸ்பியர், மில்டன் முதலியோர் எவ்வளவு அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான புத்தகம் பிடிக்கும். குழந்தையாய் இருக்கும் போது, ஒருவகையான புத்தகம் பிடிக்கும்; இளைஞராய் இருக்கும்போது, ஒருவகையான புத்தகம் பிடிக்கும்; வயது ஆக ஆக விருப்பம் மாறும்.

உனக்கு என்ன புத்தகம் வாசிக்கப் பிடிக்கும் எனச் சொல்! உனக்குக் கவிதை வாசிக்கப் பிடிக்குமா? அல்லது வரலாறு, நாட்டு நடப்பு, பொருளாதாரம் முதலிய புத்தகங்கள் பிடிக்குமா? உன் ஈடுபாடு தெரிந்தபின் எந்தப் புத்தகம் வாசிக்கலாம் என்பது குறித்து, உனக்கு எழுதுவேன். உன்மீது புத்தகங்களைத் திணிக்க நான் விரும்பவில்லை.

சில புத்தகங்கள் பற்றிப் பொதுவாகப் பேசலாம், பிளேட்டோவின் புத்தகங்கள் சுவையானவை; சிந்தனையைத் தூண்டுபவை. அவை சுருக்கமாகவும் இருக்கும்; சுவையாகவும் இருக்கும்; எளிதாகவும் இருக்கும். நாடகங்களைப் பற்றிப் பேசுகிறோம். அது சரி! நீ காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தை வாசித்திருக்கிறாயா? அது வாசிக்க வேண்டிய நூல்.

எனக்கு மிகவும் பிடித்தமானவர் பெட்ரண்ட் ரஸ்ஸல். அவருடை ஆங்கிலம் அருமையானது. அறிவார்ந்த எழுத்து அவருடையது.

நாம் ஏன் புத்தகம் வாசிக்க வேணடும்? அறிவு பெறுவதற்காக, மகிழ்ச்சி அடைவதற்காக எனப் பல காரணங்களைச் சொல்லலாம். அவை உண்மைதாம். ஆனால், இதற்குமேலும் ஒரு காரணம் உண்டு. ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை. அதனைப் புரிந்து கொள்ளவும், முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது.

தனியொரு மனிதனின் பட்டறிவு மிகவும் குறுகியது. புத்தகங்களில் மனிதர்களின் ஏராளமான பட்டறிவுச் சிந்தனைகளும் அடங்கி உள்ளன. அவற்றை வாசிக்கும் போது, நாம் வசிக்கும் சிறு மூலையிலிருந்து வெளியேறுகிறோம். மலை மீது ஏறிநின்று, இதுவரை பார்க்காத உலகக் காட்சிகளைப் பார்க்கும் உணர்வைப் பெறுகிறோம்.

அன்புமிக்க

**உன் அப்பா**

அலகு 2



## செயல்பாடுகள்

- நாம் புத்தங்கள் ஏன் வாசிக்க வேண்டும்? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- உங்கள் ஊரில் நடைபெறும் ஒணவிழாவில் பங்கேற்க உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
- உங்களுக்கு விருப்பமான புத்தகத்தை நூலகத்திலிருந்து எடுத்து, வாசித்து நூற்குறிப்பு எழுதுங்கள்.

# சித்திரம் பேசுதடி!



ராஜா ரவிவர்மா

சுவாமி விவேகானந்தர் சிகாகோவிலிருந்து புறப்பட்டுப் பம்பாய் நகரத்தில் வந்து இறங்கியதும், தமது சீடர்களிடம் கேட்டார்...

“பிரபல ஓவியர் ராஜா ரவிவர்மா இங்கு வசிக்கிறார் எனக் கேள்விப்பட்டேன். அவரைச் சந்திக்க வேண்டும்...”

யாராவது விரும்பி அழைத்தால் மட்டுமே, அவரது இல்லத்துக்குப் போவார் விவேகானந்தர்.

எனவே, ரவிவர்மா அழைக்காமல் அவரது இல்லத்துக்குப் போக வேண்டும் என்கிறாரே சுவாமி என்று சீடர்களுக்கு ஆச்சரியம்!

சுவாமி விவேகானந்தர் ரவிவர்மாவின் பங்களாவில் கால் பதித்ததும், ஓடிவந்து வரவேற்றார் ரவிவர்மா.

“ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தால் நானே தேடி வந்து சுவாமிகளைத் தரிசித்திருப்பேனே...!” என்று ரவிவர்மா நெகிழ்ச்சியுடன் விவேகானந்தரை வணங்கியவாறு பவ்யமாகச் சொன்னார்.

“சிகாகோ ஓவியக் கண்காட்சியில், உங்களது ஓவியங்கள் என்னை மெய்மறக்க வைத்தன. ஓவியக் கலையில் உண்மையிலேயே நீங்கள் ஒரு ராஜாதான்! உங்களைப் பாராட்டவே நேரில் தேடி வந்தேன்...” என்று சுவாமியும் நெகிழ்ச்சியோடு சொன்னார்

சுவாமிகளின் பாராட்டைக் கேட்ட ரவிவர்மா பரவசத்தில் சிலிர்த்துப் போனார். தமது ஓவியங்களுக்கு எத்தனையோ பாராட்டுகள், பரிசுகள் பெற்றிருந்தாலும் சுவாமிகளின் பாராட்டுகளால் இமயத்தின் உச்சியைத் தொட்டுவிட்ட திருப்தியும், மகிழ்ச்சியும் ரவிவர்மாவுக்குக் கிடைத்தது.

சிறுவயதில் தாம் பிறந்து வளர்ந்த கிளிமானூர் கொட்டாரத்தின் (அரண்மனை) மதில்களில் கரித்துண்டினால் ஓவியங்கள் வரைந்து பழகிய ரவிவர்மாவை, திருவனந்தபுரம் அரண்மனைக்குக் கொண்டு சென்றதுதான் அவர் வாழ்வில் ஏற்பட்ட மிகப் பெரிய திருப்பம்.

அலகு 2

ஓவியம் வரைவதில் உள்ள நுணுக்கங்கள், வண்ணக் கலவைகளை உருவாக்குவதில் உள்ள நுட்பங்கள் இவற்றைத் திருவனந்தபுரத்தில் வாழ்ந்த நாட்களில்தான் ரவிவர்மா பெற்றார்.

ஓவியங்கள் வரைதலின் அரிச்சுவடியைத் தியோடர் ஜென்சன் என்ற பிரிட்டிஷ் ஓவியரிடமிருந்தும், தஞ்சாவூர்ப் பாணியை ராமசாமி நாயக்கரிடமிருந்தும் ஏகலைவனாகத் தெரிந்து கொண்டார். நாயக்கரின் சிஷ்யரான ஆறுமுகம் பிள்ளை வர்ணக் கூட்டு உண்டாக்கும் ரகசியங்களைக் குருவுக்குத் தெரியாமல் ரவிவர்மாவுக்கு ரகசியமாகச் சொல்லிக் கொடுத்தார்.

தஞ்சாவூர் ஓவியப்பாணியும் மேற்கத்திய ஓவியக் கலையும் சங்கமிக்கும் கடலாக ஆனார் ரவிவர்மா.



அவர் வரைந்த ஓவியங்களுக்குப் பரிசுகள் கிடைக்கத் தொடங்கின. ரவிவர்மாவின் பெயர் தென்னகம் முழுவதும் பரவியது.

'என்னை வரையுங்கள்' என்று கடிதங்கள் மூலம் ரவிவர்மாவுக்கு வேண்டுகோள்கள் வந்து குவியத் தொடங்கின. நாளாக ஆக, அவருக்கு வரும் கடிதங்கள் அதிகமாகிக் கொண்டே போனதால் அதற்காகவே கிளிமானூரில் ஒரு தபால் நிலையம் திறக்கப்பட்டது.

ரவிவர்மாவைப் பம்பாய் அழைக்க, 1890 வாக்கில் பம்பாய்க்குப் பயணமானார். புது இடம், பெரும் தனவந்தர்கள், அரசர்கள், சிற்றரசர்கள் வந்து போகும் பம்பாயில் ரவி வர்மாவுக்குப் பல புதிய தொடர்புகள் கிடைத்தன.

பரோடா, ஹைதராபாத், உதய்பூர், மைசூர் என்று பயணிக்கத் தொடங்கிய ரவிவர்மாவுக்குத் தூரிகையைக் கீழே வைக்கவே நேரம்

அலகு 2



கிடைக்கவில்லை. ரவிவர்மா புதுக் கோட்டை சமஸ்தானத்துக்கும் போயிருக்கிறார்.

பரோடா மன்னருக்காக 14 ஓவியங்கள் வரைந்ததில், ரவிவர்மாவுக்கு அன்றைக்கு சன்மானமாகக் கிடைத்தது ஐம்பதாயிரம் ரூபாய். அதன் மதிப்பு இப்போது 50 கோடியைத் தாண்டும். அத்தனை ஏன்! ரவிவர்மாவின் ஓவியம் ஒவ்வொன்றும் கோடி ரூபாய் மதிப்புள்ளவை. பிற்காலத்தில் தனது ஓவியங்கள் கலைபொக்கிஷமாக சர்வ தேச அரங்கில் உயர்ந்து நிற்கும் என்று ரவிவர்மா நினைத்துக் கூடப் பார்த் திருப்பாரா, தெரியவில்லை! அப்படி அவருக்குத் தெரிந்திருந்தால் தான் வரைந்த ஓவியங்களைச் சுமந்து நின்ற கிளிமானூர் அரண்மனை மதில்களை அவர் இடித்துக் கட்டியிருக்கமாட்டார்.

தனது ஓவியங்கள் மன்னர்களது அரண்மனை, சித்திரக்கூடங்களில் மட்டுமே தொங்கினால் போதாது; எல்லோருடைய வீடுகளிலும் இடம் பிடிக்க வேண்டும் என்று ரவிவர்மா விரும்பினார்.

அதற்காக 1894 இல் அச்சகம் ஒன்றை பம்பாயில் நிறுவினார். தரமான அச்சு இயந்திரங்களை ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்தார். பல வண்ண அச்சுக்கலை நுணுக்கங்களை அறிந்த ஜெர்மன் டெக்னீசியன்களையும் அழைத்து வந்தார். ஓவியங்களை அச்சிடுவதில் பால்கே சாஹிப்புடன் தொழில் ரீதியாகத் தொடர்பு வைத்திருந்தார் ரவிவர்மா.

'காளிய நர்த்தனம்' என்றொரு ஓவியத்தை ரவிவர்மா வரைந்தார். பால்கே சாஹிப் தயாரித்த காளிய நர்த்தனம் படத்தில் ஐந்து தலை நாகத்தின் மீது குட்டி கிருஷ்ணன் ஆடும் தாண்டவக் காட்சிக்கான செட், மேக்கப், காஸ்ட்யூம் ஆகியவை இப்படித் தான் அமைய வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமாக அது அமைந்தது. இந்த பால்கே சாஹிப்தான் பின்னாளில் இந்தியத் திரைப்பட உலகின் ஜாம்பவானான தாதாசாஹிப் பால்கேவாக உயர்ந்தவர்.

அன்று கேரளத்திலும் சரி, இந்தியாவின் இதர பாகங்களிலும் சரி சேலை அணியப்படவில்லை. ஜாக்கெட், சோளி கூட பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான்.

பம்பாய் நகரம் சென்ற ரவிவர்மா மராட்டியப் பெண்கள் ஒன்பது கஜ சேலையைத் தார்ப்பாய்ச்சி அணிந்திருப்பதைக் கண்டு சேலையைப் பெண்களின் அழகைக் கூட்டிக் காண்பிக்கும் ஊடகமாகக் மாற்றினார்.

தமது ஓவியங்களில் பல்வேறு நிறங்களில் சேலையை அணிவித்து, அதில் கொசுவமடிப்புகளைக் கவிதைகளாக அரங்கேற்றினார்.

முந்தானை பார்டர்களில் பட்டுவேலைகள் பளிச்சிடும்படியாக விதம்விதமான டிசைன்களை வரைந்தார். அதனால் பெண்கள் மத்தியில் ரவிவர்மாவின் ஓவியங்கள் பிரபலமாயின. ரவிவர்மாவின் ஓவிய சிருஷ்டிகள் அணியும் உடைகளைப் பார்த்து அன்றைய ஹிந்திப் படங்களிலும், மாராட்டிய நாடகங்களிலும் நாயகன் நாயகி தங்கள் உடைகளை வடிவமைக்கச் சொல்வார்களாம். பணக்கார பெண்களும் பிரத்யேகமாக வாங்குவார்களாம். இப்படிச் சேலையைத் தேசிய உடையாக மாற்றியவர் ரவிவர்மா.

திருவனந்தபுரம் அரண்மனையில் ரவிவர்மா வரைந்த ஓவியங்கள் சரிவரப் பேணப்படாததால் அவை சிதைய ஆரம்பித்தன. அவ்வப்போது உள்ளூர் ஓவியர்கள் தங்களுக்குத் தெரிந்தவரை டச் அப் செய்து வைத்தனர். அந்த டச் அப் ஒரிஜனல் ஓவியங்களுடன் ஐக்கியமாகாமல் அந்நியப் பட்டுத் தனித்து நின்றன. புதுச் சட்டைக்கும் ஒட்டுப் போட்ட சட்டைக்கும் வித்தியாசம் தெரியாமல் போகுமா?

ரவிவர்மாவின் உயிர் ஓவியங்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது.



புதுப்பிக்கப்பட்ட ஓவியங்கள் எல்லாம் படு பளிச்சிடும். அந்த ஓவியங்களின் ஒவ்வொரு நிறக் கலவையிலும் ரவிவர்மா வாழ்கிறார் என்பதை உணரமுடிகிறது.

நமது கேரளத்தைச் சேர்ந்த ரவிவர்மாவின் வாழ்க்கையை நாவலாக எழுதியிருக்கிறார் பம்பாயைச் சேர்ந்த ரஞ்சித் தேசாய்.

1848 இல் பிறந்த ரவிவர்மா 58 வயதில் 1906 அக்டோபர் 2 இல் கிளிமானூர் அரண்மனையில் காலமானார். சர்க்கரை வியாதி அவரைப் பாதித்திருந்தது.

உயிரோவியங்களை வரைந்த ரவிவர்மா மறையவில்லை; அவரது ஓவியங்கள் மூலம் இன்னும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார்.



## செயல்பாடுகள்

- விவேகானந்தரின் சீடர்கள் ஆச்சரியப்படக் காரணம் என்ன? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- ஓவியர் ராஜா ரவிவர்மா பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுங்கள்.
- குழுவாகப் பிரிந்து, பாடப்பகுதியிலிருந்து வினாக்கள் தயாரித்து வகுப்பில் ஒரு வினா-விடைப் போட்டி நடத்துங்கள்.
- ரவிவர்மா போன்ற ஓவியர்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு தயாரியுங்கள்.

# சிறிய பென்சில்

**– லெட்சுமியம்மாள் திருக்குறள் விளக்க கதை**

“நாடோறும் நாடுகமன்னன் வினைச் செய்வான்
கோடாமை கோடா துலகு” – குறள்

பொருள் : தொழிலைச் செய்கிறவன் நெறிதவறாதிருக்கும் வரை உலக வாழ்க்கை நெறிதவறாதிருக்கும். அதனால் தலைவன் தினமும் தொழில் செய்பவர்களைக் கண்காணிக்க வேண்டும்.



1947 இல் காந்திஜி பீஹாரில் யாத்திரை போய்க் கொண்டிருந்தார். கூடவே இருந்த மனுவிடம் தான் எழுதிக் கொண்டிருந்த பென்சில் துண்டைக் கொடுத்தார். அது சிறியதாகி விட்டிருந்தது. பிடித்துக் கொண்டு எழுதினால் விரல் வலிக்கும். வழுக்கிப் போய் நேரம் வீணாகும். மகாத்மாவிற்குப் பல பென்சில் தயாரிப்பாளர்களிடமிருந்து கட்டுக் கட்டாகப் புது பென்சில்கள் வந்திருந்தன. இது எதற்கு! என்றவிதமாக மனுவிற்கு யோசனை போயிற்று.

இரவு 12.30 மணி மனுவிடம் மகாத்மா, ‘ஒரு பென்சில் கொடு’ என்றார். மனு தூக்கக் கலக்கத்தோடு ஒரு புதுப் பென்சிலைக் கொடுத்தாள்.

“பழைய பென்சில் என்னாயிற்று” என்று கேட்டார் மகாத்மா. “அது ரொம்ப சிறியதாகி விட்டது” என்றார் மனு. “அதனால் எறிந்த விட்டாயா?” என்று கேட்டார் காந்திஜி.

அவர் குரலில் கண்டிப்பு காணப்பட்டது. “இல்லை இதோ எடுத்துக் கொண்டு வருகிறேன்” என்ற மனு எங்கே வைத்தோம் என்ற யோசனையோடு தேடிக் கொண்டிருந்தாள். 15 நிமிடம் சென்றது காந்திஜி எழுந்து உள்ளே வந்தார்.

“காலையில் தேடிக் கொள்ளலாம். தூக்கம் கெட்டால் அது உடம்பைப் பாதிக்கும். தானாகக் கரையும் வரை எதையும் தூக்கி வீசக் கூடாது என்பதை மறந்து விடாதே! நிறையப் புது நண்பர்கள் கிடைத்தால் பழைய நண்பர்களை உதறி எறிகிறோமா? நிறைய வருமானம் வந்தால் சில்லறை காசுகளைக் குப்பையில் போடுகிறோமா?” என்றார் காந்திஜி.

அப்புறம் மனுவிற்குத் தூக்கம் வரவில்லை. சும்மா படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

விடியற்காலை 3.30 மணி பிரார்த்தனை முடிந்தது. “மனு! பழைய பென்சிலைத் தேடி எடுத்துக் கொண்டு வா! நிறைய எழுத வேண்டியிருக்கிறது” என்றார் மகாத்மா.

ஒரு வழியாகப் பென்சில் கிடைத்து விட்டது. மகாத்மாவிடம் கொடுக்க ஓடினாள் மனு. அவர் வேறு பென்சிலால் எழுதிக் கொண்டிருந்தார்.



குட்டிப் பென்சிலை மனு நீட்ட, "இருக்கட்டும் ஜாக்கிரதையாக வை" என்றார்.

மறுபடி மன உளைச்சல் ஏற்படுவதைத் தவிர்க்கப் பென்சிலைப் பத்திரப்படுத்தினாள் மனு.

பதினைந்து நாட்கள் சென்றன. ஒரு நாள் நள்ளிரவு 12.30 க்கு உறங்கிக் கொண்டிருந்த மனுவை எழுப்பிய மகாத்மா, "பாட்னாவில் வைத்து ஒரு துண்டு பென்சில் கொடுத்தேனே! இருக்கிறதா?" என்று கேட்டார்.

மனு அதைப் பத்திரப்படுத்தி இருந்தாளே! சட்டென்று எடுத்து வந்து நீட்டினாள்.

"மனு! உனக்கு பொறுப்பு வந்து விட்டது. சின்ன பென்சில்கள் கிராமங்கள் மாதிரி. நகர முன்னேற்றம் மட்டுமே நமக்கு முக்கியமல்ல, இந்தியா ஏழை நாடு, ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தத் துண்டுப் பென்சில் கூடக் கிடைக்காமல் பரிதவிக்கிறார்கள். நான் இந்தச் சிறிய பென்சிலால் எழுதுவதைப் பார்த்தால் வறட்டு ஜம்பத்துக்காகப் பெரிய பென்சில் தேடும் பலர் சிறியதாகி விட்ட பென்சிலை உபயோகிப்பார்கள். வாயால் உபதேசம் செய்வதை விட உதாரணமாக நான் நடந்து காட்ட வேண்டாமா? என் சோதனையில் நீ ஜெயித்து விட்டாய்! எதையும் இனி நீ அலட்சியப்படுத்தமாட்டாய். தலைவன் நடத்தை கோணாதிருக்கும் வரை லட்சியம் கோணாதிருக்கும்" என்றார் காந்திஜி.

இதை வாழ்க்கையில் ஒரு படிப்பினையாய் எடுத்துக் கொண்ட மனு காந்திஜியின் பொருட்களைப் பத்திரப்படுத்துவத்தில் வெகு சிரத்தையோடு செயல்பட்டாள்.



## செயல்பாடுகள்

- சிறிய பென்சிலைக் காந்தியடிகள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறினார்?
- காந்திஜி பற்றிய கவிதைகளைச் சேகரியுங்கள். கவிதைத் தொகுப்பு உருவாக்குங்கள்.
- காந்தி பற்றிய தகவல்களைத் திரட்டி மலர் வெளியிடுங்கள்.

அலகு 2

# இந்திய நாடெங்கள் உடலே!

இந்திய நாடெங்கள் உடலே - வெள்ளி
இமயமலை எங்கள் முடியே
விந்தியமலை எங்கள் இடையே - கீழ்
மேல்தொடர் எந்திருக் கரங்கள்

கங்கையும் சிந்துவும் சடைகள் - தென்
கன்னிமுனை எங்கள் அடிகள்
பொங்கிடும் காவிரி விமலை - எங்கள்
பொன்னொளிர் பூமணி யா ரம்

உண்பதும் இந்திய உணவே - நாம்
உடுப்பதும் இந்திய உடையே
எண்ணுவ திந்திய நலமே - நாம்
இயற்றுவ தன்னையின் பணியே

அன்பான உள்ளமும் அறிவும் - வீரர்
ஆண்மையும், ஆயிரம் தொழிலும்
சிந்தையி லன்புடன் கொண்டோம் - இந்திய
தேசமே எங்கள் சுவாசம்

ஒவ்வொரு மனிதனு நாமே - நாம்
ஒவ்வொரு மனிதனு மாவோம்
இவ்வுல காலய மாமே - அதில்
இன்னுயிர்த் தொகுப் பிறையாமே

- யோகிஸ்ரீ.சுத்தானந்த பாரதியார்

## யோகிஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்



சிவகங்கையில் 1897 மே 11 இல் பிறந்தார். இவர் சிறந்த தத்துவஞானி. பாரதியார் மேல் கொண்ட பற்றால் தனது பெயரை சுத்தானந்த பாரதியார் என மாற்றிக் கொண்டார். 1989 இல் இயற்கை எய்தினார்.

**எழுதிய நூல்கள் :** கோயிலும் சாமியும், யோக சித்தி, தமிழ் திருப்பாவை, வளையாபதி அகவல், கீர்த்தனாஞ்சலி, கவிக்கனவுகள், பாரத கீதம், பாரத சக்தி மகாகாவியம்

**சிறப்பு** : அரவிந்த ஆசிரமத்தில் துறவியாக இருந்தவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ராஜராஜன் விருது பெற்றவர்.



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டுடன் பாடுங்கள்.
- பாடலின் கருத்தைக் கலந்துரையாடி இரசனைக்குறிப்பு எழுதுங்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டுப் பாடல்களைத் திரட்டுங்கள். தொகுப்பு உருவாக்குங்கள்.

அலகு 2

# கூடிவாழ்ந்தால் கோடி நன்மை!

- எஸ்.ஆர்.ஜி.சுந்தரம்

ஒருநாள் மாலை.

ஒரு பொம்மைக்காரி “பொம்மை! பொம்மை!” என்று கூவியபடித் தெருவில் சென்று கொண்டிருந்தாள். அவள் தலைமேல் பெரிய கூடை ஒன்று இருந்தது. அதில் பலவித பொம்மைகள்!

பொம்மைக்காரி ஒரு குடியிருப்புப் பகுதி வழியே வந்தாள். அந்தப் பகுதியில் நமது பாரத நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் இருந்தன. தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, கர்நாடகம், மகாராட்டிரம், இராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீர் என்று நம் இந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள்.

பொம்மைக்காரியின் குரல் கேட்ட அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அப்பொம்மைக்காரியைச் சூழ்ந்து கொண்டனர். “பொம்மைக்காரியம்மா! என்ன பொம்மைகள் வைத்திருக்கிறீர்கள்? காட்டுங்கள்” என்றான் சிவா. சிவா தமிழ்நாட்டைச் சார்ந்தவன்.

பொம்மைக்காரி கூடையைக் காட்டினாள். ஆகா... உள்ளே நிறைய பொம்மைகள்! அழகான பொம்மைகள்! அவை பஞ்சு, இரப்பர், கண்ணாடி, களிமண் ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன.

“ஹை.... இந்த சிங்கப் பொம்மை நன்றாக இருக்கிறது” என்ற சிவா சிங்கப் பொம்மையை எடுத்துப் பார்த்தான். மற்றப் பிள்ளைகளும் கூடையிலிருந்த பொம்மைகளை எடுக்கத் தொடங்கினர். ஒருவர் கையிலிருந்த பொம்மை மற்றவர் பிடுங்கிப் பார்த்தனர். பொம்மைகள் உடைந்துவிடும் எனப் பயந்தாள் பொம்மைக்காரி.

“பிள்ளைகளே! பொம்மைகளை முதலில் கூடையில் வையுங்கள். நீங்கள் எல்லோரும் அப்படிப்போய் உட்காருங்கள்.



ஒவ்வொருவராக வந்து உங்களுக்குப் பிடித்த பொம்மைகள் எதுவென்று சொல்லுங்கள். எடுத்துத் தருகிறேன் என்றாள் பொம்மைக்காரி.

முதலில் ஜான்சி வந்தாள். பொம்மைகளை எடுக்காமல் அப்படியே பார்த்தாள். "பொம்மைக்காரியம்மா! பச்சைநிறச் சேலை கட்டியிருக்கும் இந்தப் பொம்மை எனக்கு வேண்டும். இப்பொம்மையின் அழகான கண்களின் வீர உணர்ச்சி நிறைந்து இருக்கிறது!" என்றாள் ஜான்சி.

"சரி அப்படிப் போய் உட்கார்! கடைசியில் எடுத்துத் தருகிறேன் என்றாள் பொம்மைக்காரி. அடுத்து சிவா கூடைக்கு அருகில் வந்தான். பொம்மைகளைப் பார்த்தான். தனக்குத் தலையில் கிரீடம் அணிந்துள்ள இந்தப் பொம்மைதான் வேண்டும்" என்றான். அவனும் மறுபடியும் பழைய இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

தீபா அடுத்ததாக வந்தாள். "பொம்மைக்காரியம்மா! நடுவில் கம்பீரமாக நிற்கும் இந்தப் பொம்மையே எனக்கு வேண்டும் என்றாள். அவளுக்குப் பின் வந்த இரஞ்சித் "கையில் மூவண்ணக் கொடியைப் பிடித்தபடி நின்று கொண்டிருக்கும் இந்தப் பொம்மைதான் எனக்குப் பிடித்த பொம்மை" என்றான். இப்படியே மேனகாவும், சாரதாவும் ஒரு பொம்மையைக் காட்டி அதைத் தர வேண்டினர்.

சிவா, ஜான்சி, தீபா, இரஞ்சித், மேனகா, சாரதா இவர்கள் எல்லாரும் கேட்ட பொம்மை ஒரே பொம்மைதான். அது எது? தெரியுமா? பாரத மாதா பொம்மை!

பாரத மாதா பொம்மை களிமண்ணால் செய்யப்பட்டு மிகமிக அழகாகக் காட்சியளித்தது. தலையில் தங்கநிறத்தில் கிரீடம், இடுப்பில் முத்துக்கள் பதிக்கப்பட்ட ஒட்டியாணம், கால்களில் மின்னும் வெள்ளிச் சிலம்பு, பட்டைக்கரை போட்ட பச்சை வண்ணச் சேலை, கையில் ஒரு கோலில் மூவண்ணக்கொடி. இப்படிக் காட்சியளித்த அந்த அன்னை நம் பாரத தேசத்தின் உருவ அமைப்பின் முன் கம்பீரமாக நின்றுகொண்டு காட்சியளித்தாள்.

"குழந்தைகளே நீங்கள் எல்லோரும் ஒன்றாகக் கேட்டது இந்தப் பாரத மாதாவைத் தான். ஆனால் என்னிடம் இருப்பதோ ஒரே ஒரு பொம்மைதான். மற்ற பொம்மைகள் எல்லாம் விற்றுவிட்டன. எப்படி இதை உங்கள் ஆறு பேருக்கும் கொடுக்க முடியும்? என்று கேட்டாள் பொம்மைக்காரி.

உடனே சிவா "எனக்குத்தான் இந்தப் பாரத மாதாவைக் கொடுக்க வேண்டும். இதன் மேல் எனக்குப் பக்தி அதிகம். நானும் என் பெற்றோர்களும் தினமும் பாரத மாதாவைத் தான் வணங்குகிறோம்" என்றான்.

"அது முடியாது. எங்கள் மாநிலம் கர்நாடகம். இதில் உள்ள கோலார்த் தங்கச் சுரங்கம் புகழ்பெற்றது. நம் பாரதத்திற்கே இதனால் பெருமை. நான் அந்த மாநிலத்தைச் சார்ந்தவள். அதனால் எனக்கே இந்தப் பாரத மாதா பொம்மை" என்றாள் தீபா.

அலகு 2

“அது தவறு. பாரத எல்லையைக் காப்பவர்கள் இராணுவ வீரர்கள். இவர்களில் பலர் எங்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். எனவே இந்தப் பாரத மாதா பொம்மை எனக்குத்தான்” என்றான் இரஞ்சித்.

சிவா பேசாமல் இருக்கவில்லை. உடனே, கலையழகு மிக்கப் பல கோயில் கோபுரங்கள் எங்கள் தமிழகத்தில் தான் அதிகம். அதனால்தான் பாரத நாட்டிற்கும் பெருமை. எனவே பாரத மாதா எங்களுக்குத் தான் சொந்தம். என்றான்.

இப்படி எல்லோரும் தனக்கேதான் அந்தப் பாரத மாதா பொம்மை வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தனர். உரிமை கொண்டாடினர்.

பொம்மைக்காரி யோசித்தாள். “ பிள்ளைகளே ஒன்று செய்யுங்கள். நீங்கள் எல்லோரும் நாளைக்காலை என் வீட்டிற்கு வாருங்கள். ஒரு சிறிய போட்டி வைக்கிறேன். யாருக்கு அந்தப் போட்டியில் வெற்றி கிடைக்கிறதோ அவர்களுக்கே இந்தப் பாரத மாதா பொம்மையைத் தருவேன் சம்மதமா? என்று கேட்டாள். அனைவரும் சம்மதித்தனர். அடுத்த நாள் காலை அனைவரும் பொம்மைக்காரியின் வீட்டிற்குச் சென்றனர். பொம்மைக்காரி அவர்களை வீட்டுத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே ஓர் இடத்தில் ஒரு பெரிய கருங்கல் கிடந்தது.

அலகு 2

“பிள்ளைகளே இதோ பாருங்கள்! இந்தக் கல்லின் கீழே ஒரு புதையல் இருக்கிறது. யார் கல்லை நகர்த்திப் புதையலை எடுத்து தருகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்தப்பாரத மாதா பொம்மை! வெற்றிபெற்றவர் இந்தப் பொம்மைக்கான காசு தரவேண்டாம்” என்றாள்.

பிள்ளைகள் சம்மதித்தனர். உடனே பொம்மைக்காரி அருகிலிருந்த ஆறு சவுக்குக் கொம்புகளை எடுத்து ஆளுக்கு ஒன்றாக அவர்களிடம் கொடுத்தாள்.

முதலில் சிவா முயற்சி செய்தான். கொம்பு நுனியைக் கல்லின் கீழே போட்டுப் புரட்ட முயன்றான். கல் ஒரு அங்குலம் கூட நகரவில்லை. கொம்புதான் படக்கென்று ஒடிந்தது. அதைக் கண்டு மற்றப் பிள்ளைகள் கேலியாகச் சிரித்தனர். அடுத்து ஜான்சி கல்லைத் தள்ள முயன்றாள். முடியவில்லை. கொம்புதான் ஒடிந்தது. இவ்வாறே மற்ற நால்வரும் முயற்சி செய்து பார்த்தனர். கல் அசையவில்லை.



கொம்புகள் உடைந்தன. அனைவரும் வருத்தத்துடன் உட்கார்ந்து விட்டனர். அவர்களைப் பார்த்த பொம்மைக்காரி, சோர்ந்து விட வேண்டாம். எழுந்து வாருங்கள். இந்தக் கொம்புகளை எடுத்துக் கொண்டு மறுபடியும் முயற்சி செய்யுங்கள்" என்றாள்.

"வேண்டாம்! இந்தக் கொம்புகளும் உடைந்துதான் போகும் என்றனர் பிள்ளைகள் உடையாது நான் சொல்கிறபடி செய்யுங்கள். முதலில் நீங்கள் தனித்தனியே முயற்சி செய்தீர்கள். தனிக்கொம்பினால் கல்லை நகரச் செய்ய வலிமை இல்லை. அதனால் அவை உடைந்து விட்டன. இப்பொழுது நீங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கல்லைப் புரட்டுங்கள். கல் வினாடி நேரத்தில் நகர்ந்து விடும். பின் புதையலை எடுங்கள்" என்றாள்.

பிள்ளைகள் பொம்மைக்காரி சொன்னபடி ஒன்றாகச் சேர்ந்து கல்லைப் புரட்ட முயன்றனர். கல் புரண்டு விட்டது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் கைதட்டினர். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம் கல்லின் கீழே எந்தப் புதையலும் இல்லை. ஒரு வெள்ளைத்தாள் மட்டும் நான்காக மடித்துவைக்கப்பட்டிருந்தது.

"பிள்ளைகளே! என்ன பேசாமல் நிற்கிறீர்கள், இந்த வெள்ளைத்தாளைப் பிரியுங்கள்" என்றாள் பொம்மைக்காரி. அனைவரும் வெள்ளைத்தாளை எடுத்துப் பிரித்தனர்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பெற்றிடுமே! பிரிந்து வாழ்ந்தால் அனைவரும் அல்லல்பட்டு அழிவோமே என்று எழுதப்பட்டிருந்தது.

சிறுவர்கள் பொம்மைக்காரியின் முகத்தைப் பார்த்தனர். பொம்மைக்காரி குறும்பாகச் சிரித்தாள்.

"பிள்ளைகளே நான் உங்களிடம் சொன்ன புதையல் இதுதான்! ஒற்றுமை உணர்ச்சிதான் சிறந்த புதையல்! இந்தப் புதையலை வெளியில் தேட முடியாது. நம் இதயத்தில் தான் இந்தப் புதையல் புதைந்திருக்கிறது. மாநிலம், மொழி, மதம், சாதி இவைகளை மறந்து ஒற்றுமையுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த ஒற்றுமை உணர்ச்சியை நீங்கள் இப்பொழுது முதலே வளர்த்துக் கொள்ள வேண்டும். இதை உங்களுக்கு உணர்த்தத்தான் இப்படிச் செய்யச் சொன்னேன். புரிந்து கொண்டீர்களா? என்றாள் பொம்மைக்காரி.

ஒன்றுபட்டுச் செயலாற்றினால் வெற்றி உறுதி என்பதைத் தெரிந்து கொண்டோம் என்றனர் பிள்ளைகள்.

"ம்... இப்பொழுது உங்கள் கைகளை நீட்டுங்கள்" என்றாள் பொம்மைக்காரி. எல்லோரும் தங்கள் கைகளை நீட்டினர். பாரதா மாதா பொம்மையை அவர்கள் கையில் வைத்தாள் பொம்மைக்காரி! அதற்குப் பூமாலை போட்டாள்.

பிள்ளைகளே! பூமித்தாயின் ஒரு பகுதி பாரத நாடு! நாம் பாரத நாட்டில் பிறந்து வளர்ந்து வருகிறோம்.

எனவே இந்தப் பாரத மாதா நம் தாய் போன்றவள். இந்த இந்தியத் தாயை வணங்கி வாழ்த்தும் சொல்லே வந்தே மாதரம். நீங்கள் ஆறு பேரும் ஒற்றுமையாக இந்தப் பாரத மாதா பொம்மையை வைத்து விளையாடுங்கள். இந்தப் பொம்மைக்கு அலங்காரம் செய்யுங்கள். முன்னால் கோலம் போடுங்கள். தேசபக்தி பாடல்களைப் பாடுங்கள். பெரியவர்களை அழைத்து வந்து, நம் நாடு சுதந்திரம் அடைந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். செய்வீர்களா? என்றாள் பொம்மைக்காரி.

அப்படியே செய்கிறோம்

சரி இப்பொழுது எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள்,

வந்தே மாதரம்! வந்தே மாதரம்!



## செயல்பாடுகள்

- இக்கதையை நாடக வடிவில் மாற்றி எழுதி, நடித்துக் காட்டுங்கள்.
- இக்கதையில் வரும் கதாப்பாத்திரங்களில் உங்களுக்குப் பிடித்தவர் யார்? ஏன் என்று எழுதுங்கள்.

அலகு
3

# தமிழருவி

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தக்குடி என்னும் புகழ்பெற்றது தமிழ் இனம். இதன் பெருமைகளை உலகறியச் செய்வது செம்மொழித்தமிழ் இலக்கியங்களே. இவற்றின் பெருமைகளையும், சிறப்புகளையும் மாணவர்களுக்கு உணர்த்தும் விதத்தில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள் :**

- கவிதைகளை வாசித்து உள்ளடக்கத்தைக் கருத்துகளாகத் தொகுத்து எழுதுகிறார்கள்.
- நாடகக் கதாபாத்திரங்களின் தனித்தன்மைகளைப் புரிந்து, குறிப்பு எழுதுகிறார்கள்.
- இலக்கியப் பாடல்கள், பிற கவிதைகள் இவற்றை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வேறொரு மொழி வெளியீட்டு வடிவமாக மாற்றி எழுதுகிறார்கள்.
- கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கவிதைகள், பாடல்கள் சேகரிக்கிறார்கள், கவிதைகள் எழுதுகிறார்கள்.
- இலக்கியப் பாடல்கள், புதுக்கவிதைகள் - ஒப்பீடுசெய்கிறார்கள்.
- படத்தொகுப்புகள், செய்தித் தொகுப்புகள் சேகரித்து வெளியிடுகிறார்கள், கட்டுரை எழுதுகிறார்கள்.

# நீதி நூல்கள்

## திருக்குறள்

**1. அன்புடைமை**

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு குறள் : 72

**2. அடக்கம் உடைமை**

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு குறள் : 127

**3. ஒழுக்கம் உடைமை**

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். குறள் : 138

**4. பொறை உடைமை**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை குறள் : 151

**5. அருள் உடைமை**

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. குறள் : 247

6. அறிவுடைமை
அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். குறள் : 430

7. ஊக்கம் உடைமை
வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு. குறள் : 595

8. ஆள்வினை உடைமை
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். குறள் : 616

9. பண்புடைமை
அரம்போலும் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். குறள் : 997

10. நாணுடைமை
அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃது இன்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. குறள் : 1014

## திருக்குறள்



திருக்குறள் உலகப் புகழ்பெற்ற நூலாகும். இந்நூல் 2000 ஆண்டுத் தொன்மையுடையது. உலகப்பொதுமறை, பொய்யாமொழி, முப்பால், தெய்வநூல் எனப் பலபெயர்களாலும் அழைக்கப்படுகிறது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களை உடையது. திருக்குறள் 133 அதிகாரங்களையும், 1330 பாடல்களையும் கொண்டது.



## செயல்பாடுகள்

குறள்களுக்கு ஏற்ற பொருளைக் கண்டுபிடியுங்கள்.

எவற்றை அடக்காவிட்டாலும் நாவை அடக்க வேண்டும். நாவடக்கம் கொள்ளாவிடில் தவறான சொற்களைப் பேசி அவமானத்தைச் சுமக்க நேரிடும்.

அன்பில்லாதவர்கள் அனைத்துப் பொருளையும் தமக்கே உரியனவாக்கித் தாமே அனுபவிப்பர். அன்புடையோர் தம் உடல் உட்பட அனைத்துச் செல்வத்தையும் பிறருக்கும் கொடுத்து உதவி வாழ்வார்கள்.

நிலம் தன்னைத் தோண்டுவாரையும் தாங்கிக் கொள்வது போலத் தன்னை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்வது தலைசிறந்த பண்பு ஆகும்.

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக வாழ்க்கை இன்பங்கள் இல்லாமல் போவது போல் உயிர்களிடத்து உயரிய அருள் எனும் அன்பு கொள்ளாதவர்க்கு வானுலக இன்பம் இல்லாது போகும்.

வித்தே மரமாகி வளர்தல் போல், எல்லா நன்மைகளுக்கும் வித்தாக நிற்பது நல்லொழுக்கம். தீயொழுக்கம் என்றென்றும் துன்பத்தை மட்டுமே தரும்.

அறிவுடையவர்கள் அனைத்தையும் பெற்றவராக வாழ்வர். அறிவில்லாதவர்கள் எவை இருந்தும் அவை இல்லாதவர்களே ஆவர்.

முயற்சி ஒருவருக்குச் செல்வப் பெருக்கத்தைக் கொடுக்கும். முயற்சியின்மை ஒருவனை ஒன்றுமில்லாதவனாக்கி வறுமையில் நிறுத்தி விடும்.

ஒருவர் அரம் போன்ற கூர்மையான அறிவுடையராயினும் மனிதத் தன்மை அற்றவராக இருந்தால் மரம் போலவே கருதப்படுவார்.

நல்லவர்களுக்கு வெட்கம் ஓர் அழகு. வெட்கம் மற்றவரின் வீறுநடை நோயெனவே கருதப்படும்.

நீரில் மலரும் மலர்த்தண்டின் நீளம் அது நிற்கும் நீரின் அளவைப் பொறுத்திருக்கும். அதுபோல மனிதர்கள் தாம் கொண்ட உள்ளத்தின் உறுதி அளவிற்கு உயர்ந்து நிற்பர்.

# நன்னெறி



## வறுமையிலும் உதவி

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ- பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்று முதவும் கனி.

கொண்ட பயனைக் கொடுத்து அழிவை அடைந்த வாழையின் கீழ் நிற்கின்ற கன்றும் பழத்தைக் கொடுக்கும், அதுபோல, இரப்பவர்களுக்குக் கொடுத்துத் தந்தை ஏழை ஆனாலும் அவர் புதல்வர் தம் ஈகையைக் கைவிடமாட்டார்கள்.

## பிறர் துன்பங்கண்டு உள்ளங்கசிதல்

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

பிணியால் வருந்துகின்ற பிற உறுப்பைக் கண்டு கண்கள் அழும், அது போல, பிறருக்கு வந்த நோயைத் தம் நோய் போல் நினைத்து நெருப்பிலே பட்ட நெய்போல மனம் உருகுவர் பெரியவர்.



### செயல்பாடுகள்

- 'வறுமையிலும் உதவி' கவிதை பற்றிக் கலந்துரையாடுங்கள். குறிப்பு எழுதுங்கள்.
- பிறருக்கு வரும் நோய் தம் நோய் போல் காண்பவர்கள் யார்?

அலகு 3

# நல்வழி

## உழவின் உயர்வு



ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே- ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, கண்டீர்!
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

ஆற்றின் கரையிலுள்ள மரமும் அரசன் அறிய பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து விடும். ஆனால் உழுது பயிர் செய்து உண்டு வாழும் வாழ்க்கை உயர்வானதாகும். அதற்கு நிகரான வாழ்க்கை வேறில்லை.

## வரவறிந்து செலவிட வேண்டும்

அலகு 3

ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

வரவறிந்து செலவிட வேண்டும். தனக்குக் கிடைத்த பொருளுக்கு மிகுதியாகச் செலவு செய்பவன், பெருமை கெட்டு, அறிவு இழந்து தான் போகும் திசையிலும் எல்லார்க்கும் திருடனாகி, ஏழு வகைப் பிறப்புகளிலும் பாவம் உடையவனாகி நன் மக்களுக்குப் பொல்லாதவனாவான்.



## செயல்பாடுகள்

- உழவின் உயர்வு பற்றிக் கவிஞர் என்ன கூறுகிறார்? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- ஏழு பிறப்பிலும் பாவம் செய்தவன் யார்?
- உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
  தொழுதுண்டு பின்செல்பவர் – இக்குறட்பாவோடு
  உழவின் உயர்வு என்ற நல்வழிப் பாடலின் கருத்தையும் ஒப்பிட்டு எழுதுங்கள்.

# கவிதைப் படைப்புகள்

## மாணவனுக்கு....



கல்விபெறும் மாணவனாம் பருவம் கண்டீர்
   கவலையற்ற களி சிறந்த காலமாகும்
தொல்லை மிக்க உலக நடைச் சூழலில் நேரும்
   துன்பங்கள் துயரங்கள் தோன்றாக் காலம்

எல்லையற்ற ஆர்வமுள்ள இக்காலந்தான்
   எக்கலையும் பயில்வதற்கு ஏற்ற காலம்
நல்வழியில் பயன்படுத்தும் மாணவர்க்கே
   நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும்

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்.
   அவர் சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன் கருத்தைக் கூற வேண்டும்
   குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும்

மாசான வார்த்தையெதும் ஆசான் மாட்டு
   மறந்தேனும் ஒரு போதும் பேசான் என்ற
ஆசாரம் உள்ளவனே நல்ல சீடன்
   அறனறிந்த நல்வாழ்விற்(கு) அருகனாவான்

– **கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை**



### செயல்பாடுகள்

- கவிதையை மெட்டுடன் பாடுங்கள்.
- நல்ல சீடன் எவ்வாறு செயல்பட வேண்டும்?
- ‘கல்விக் கற்க ஏற்ற காலம் இளமைக்காலமே’ – இதையே ‘இளமையில் கல்’ என்று ஔவையாரும் குறிப்பிடுகிறார். இக்கருத்தை வலியுறுத்தி ஒரு கட்டுரை எழுதுங்கள்.

அலகு 3



# வாழ்க தமிழ்

படையுடன் கடல் கடந்தார்
பழந்தமிழகத்தார்
உடையுடன் தமிழர் என்னும்
உரிமையை எடுத்தே சென்றார்
மடையெனப் பெருக்கும் பண்பில்
மாண்புறு சங்கஞ் சேர்ந்தார்!
தமிழனெங் கிருந்தா னேனும்
தமிழனே பிறப்பால் நெஞ்சால்
குமிழ்நகைத் தமிழர் தங்கள்
குலஞ்செழிப் படைதல் காண்பார்
உமிழ்திரைக் கடலும் தாண்டி
ஒளிபெற வாழ்வார்! வாழ்வார்!
என்தமிழ் மகனே! உன்னை
இப்புவி மறவா தென்றும்!
உன்னையும் என்பால் சேர்க்கும்
உயிருடல் எனநாம் வாழ்வோம்!
தென்திசைப் புகழைப் பாரில்
செலுத்துவோம்! செலுத்துவோம் நாம்!

## கவிஞர் கண்ணதாசன்



இவர் புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும், கவிஞரும் ஆவார். இவரது இயற்பெயர் முத்தையா. இவர் 1927 ஜூன் 24 ஆம் நாள் பிறந்தார். ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையும், நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும் படைத்து உள்ளார். இவர் சாகித்ய அகாதமி விருது பெற்றவர். 1981 அக்டோபர் 17 ஆம் நாள் மறைந்தார்.



## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டுடன் பாடுங்கள்.
- கவிதையில் குறிப்பிடும் கருத்துகளைக் கலந்துரையாடுங்கள். குறிப்பு எழுதுங்கள்.

# நூலகம்



நூலகம் நுண்மாண் நுழைபுலம்
விதைக்கும் விளைநிலம்
அறிவு விரிவாகும் அட்சய பாத்திரம்
கருத்து செறிவாகும் கற்பக வார்ப்படம்
அத்தனை இயலும் அத்துப்படியாக
நூல்களின் இடமே பச்சைக் கொடி காட்டும்
பாடப்புத்தகம் வரைபடம் போல
நூலகம் செல்வது பயணம் போல
தேற்றம் பற்றி மட்டுமல்ல அதன்
தோற்றம் பற்றியும் தெரிகிற போதே
படிப்பது எளிது மனத்தில் பதிப்பது எளிது
கணிதம் பற்றிப் பயில்கிற போதே அதை வடித்த
கனவான் பற்றியும் அறிகிற ஆர்வம்
கணக்குச் சுவையை அதிகம் ஆக்கும்
மனத்தின் மற்றொரு அங்கம் ஆகும்
நூலகம் என்பது பயிலரங்கம்!
கண்கள் நடத்தும் கவியரங்கம்!

**- வெ. இறையன்பு**



## செயல்பாடுகள்

- நூலகம் பற்றிக் கவிஞர் கூறுவது குறித்துக் கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- நுண்மாண், நுழைபுலம், செறிவு, கனவான் இச்சொற்களுக்குச் சொல்லகராதி பார்த்துப் பொருள் கண்டுபிடியுங்கள்.

# தூது சென்ற புலவர்

– ஏ.ஜோதி

நாடகம்

**கதாபாத்திரங்கள்** : அதியமான், ஔவையார், அவையினர்.

(அதியமான் அரியணையில் அமர்ந்து இருக்கிறான். அவையினரும் அவரவர் இருக்கைகளில் அமர்ந்து உள்ளனர். கையில் வேலுடன் வீரன் ஒருவன் உள்ளே நுழைந்து அரசனை வணங்குகிறான்.)

## காட்சி 1

## இடம் தகடூர் அரசவை

வீரன் : அரசே! ஔவையார் தங்களைக் காண வந்து கொண்டிருக்கிறார்.

அதியமான் : (அரியணையை விட்டு எழுந்து) என்ன பெரும் புலவர் ஔவையாரா? அரசவைக்கு வருகிறாரா?

(ஔவையார் உள்ளே நுழைகிறார். அரியணையை விட்டு இறங்கி அதியமான் ஔவையாரை வரவேற்கிறான்)

அதியமான் : வாருங்கள் ஔவையாரே! இப்பொழுது தான் இந்த அதியமானின் நினைவு தங்களுக்கு வந்ததா? தங்களின் இனிய தமிழைக் கேட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ?

ஔவை : தமிழகம் எங்கும் சுற்றித் தமிழ்ப் பணி புரியும் நான் அடிக்கடி இங்கே வர முடியுமா? உம் பேரன்பில் மகிழ்ந்ததால்தான் மீண்டும் இங்கே வந்துள்ளேன்.

அதியமான் : தாங்கள் இந்த முறையாவது என் அரண்மனையில் அதிக நாட்கள் தங்க வேண்டும். என் அன்பு வேண்டுகோளை மறுக்கக் கூடாது.

ஔவை : உம் அன்பினால் ஈர்க்கப்பட்டுத்தான் இங்கு வந்துள்ளேன். சென்ற முறை நான் இங்கு வந்த போது எங்கும் விழா ஆரவாரம் தான் கேட்டது. ஆனால் இப்பொழுதோ வீரர்களின் வாள்கள் மோதும் ஒலியும் குதிரைகளின் கனைப்பு ஒலியும் யானைகளின் பிளிறலும் எங்கும் கேட்கிறதே. தகடூரே பரபரப்புடன் இருப்பது போலத் தெரிகிறதே.

அதியமான் : ஔவையாரே! வழக்கமான போர்ப் பயிற்சிதான் தகடூரில் நடக்கிறது. குறிப்பிடும்படி ஒன்றும் இல்லை. பயணத்தால் தாங்கள் களைப்படைந்து உள்ளீர்கள். விருந்துண்டு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

ஔவை : வழக்கமான போர்ப் பயிற்சியாக எனக்குத் தெரியவில்லை. எதையும் என்னிடம் மறைக்க வேண்டாம். உண்மையைச் சொல்லுங்கள்.

அதியமான் : காஞ்சியை ஆளும் அரசர் தொண்டைமான் இளந்திரையனைத் தங்களுக்குத் தெரியும் அல்லவா?

ஔவை : நன்றாகத் தெரியும். உம்மைப் போலவே அவரும் புலவர்களைப் பெரிதும் மதிப்பவர். காஞ்சி அரண்மனையில் சில நாட்கள் தங்கி அவர் விருந்தோம்பலில் மகிழ்ந்தவள் நான். உம்மைப் போலவே நல்ல பண்பாளர் அவர்.

அதியமான் : தொண்டைமான் இளந்திரையன் தகடூரைக் கைப்பற்ற எண்ணம் கொண்டுள்ளார். அதற்காகப் பெரும்படை திரட்டி வருகிறார். ஒற்றர்கள் வழியாகக் கிடைத்த நம்பத் தகுந்த செய்தி இது. வரும் முன் காப்பது நல்லது என்றே இங்கு எங்கும் போர்ப்பயிற்சி நடக்கிறது. கொல்லர்கள் இரவு பகல் பாராமல் வாளையும் வேலையும் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். வீரம் விளைந்த இந்த நாட்டைப் பகைவர்கள் கைப்பற்ற முடியுமா?

ஔவை : தொண்டைமான் இளந்திரையனைப் பெரும்படை வலிமை கொண்டவர் என்று எல்லோரும் புகழ்கிறார்களே.



அலகு 3

## காட்சி 2

### இடம் - காஞ்சி அரசவை

பாத்திரங்கள் : (தொண்டைமான் இளந்திரையன், ஔவையார், அவையினர் வீரர்கள்)

இளந்திரையன் அரியணையில் அமர்ந்து இருக்கிறான். அவையினர் அமர்ந்து இருக்கின்றனர். வேல் ஏந்திய வீரன் உள்ளே நுழைந்து அரசனை வணங்குகிறான்)

வீரன் : காஞ்சி நாடாளும் கொற்றவ வாழி! தங்களைக் காணப் பெரும் புலவர் ஔவையார் வந்து கொண்டிருக்கிறார்.

இளந்திரையன் : (வியப்புடன்) தமிழ் மூதாட்டி ஔவையாரா வருகிறார்?

(ஔவையார் உள்ளே நுழைகிறார். அரசன் எழுந்து ஔவையாரை வரவேற்கிறான்)

இளந்திரையன் : தமிழ் மூதாட்டியே! தங்கள் வருகையால் இந்த நாடே பெருமை பெற்றது.

ஔவை : தமிழ் மீதும் புலவர்கள் மீதும் பேரன்பு வைத்திருக்கும் அரசே! நீர் நீடூழி வாழ்க. நான் பரிசில் பெறுவதற்காக இங்கு வரவில்லை. வேறு வேலையாக வந்தேன்.

இளந்திரையன் : ஔவையாரே! தாங்கள் எதற்காக வந்திருந்தாலும் இந்த நாடு தங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேட்கலாம்.



ஔவை : புலவர்கள் உயிரைக் கேட்டாலும் நீர் தருவீர் என்பதை நான் அறிவேன். அண்மையில் நான் தகடூர் சென்றிருந்தேன். அங்கே வள்ளல் அதியமானைச் சந்தித்தேன். நீர் தகடூரின் மீது படையெடுக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்பதை அறிவதற்காகவே இங்கு வந்தேன்.

இளந்திரையன் : புலவரே! பக்கத்து நாடுகளின் மீது போர் செய்து அவற்றைக் கைப்பற்றுதல் வலிமை வாய்ந்த அரசனுக்குப் பெருமை சேர்க்கும் செயல்தானே!

ஔவை : போரின் முடிவு வெற்றியாக இருந்தால் பெருமை சேர்க்கும் செயல்தான். அதியமானும் உம்மைப் போன்றே சிறந்த வீரர். தகடூர் மக்களும் போர் செய்வதில் வல்லவர்கள். இது உமக்குத் தெரியாதா?

இளந்திரையன் : (தனக்குள்) இவர் நம் வலிமையைக் குறைத்து மதிப்பிட்டு இருக்கிறார். அதனால் தான் இப்படிப் பேசுகிறார். நம் படைக் கருவிகள் வைக்கப்பட்டு இருக்கும் கொட்டிலுக்கு இவரை அழைத்துச் செல்வோம். அப்பொழுது நம் வலிமையும் ஆற்றலும் இவருக்குப் புரியும்

ஔவையாரே! என்னுடன் வாருங்கள். எங்கள் படைக்கலக் கொட்டிலைப் பார்வையிடலாம்.

ஔவை : வருகிறேன்.

(வீரர்கள் சூழ ஔவையாரும் இளந்திரையனும் செல்கின்றனர்)

(திரை)

இளந்திரையன் : ஔவையாரே! இந்த அரங்கத்தில் பல்லாயிரக் கணக்கான வேல்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன, பாருங்கள்.

ஔவை : ஆ! புத்தம் புதிய வேல்கள் அனைத்தும் பளபளவென்று மின்னுகின்றனவே.

இளந்திரையன் : வாருங்கள் அடுத்த அரங்கிற்குள் நுழைவோம். இங்கு எண்ணற்ற வாள்களும் கேடயங்களும் வைக்கப்பட்டு இருக்கின்றன, பாருங்கள்.

ஔவை : ஆ! இங்கும் எல்லா வாள்களும் கேடயங்களும் புத்தம் புதிதாக மின்னுகின்றனவே.

அலகு 3



காட்சி 3

இடம்- காஞ்சி அரசவை

பாத்திரங்கள் : இளந்திரையன், ஔவையார், அவையோர், வீரர்கள்

(இளந்திரையனும் ஔவையாரும் வீரர்கள் புடைசூழ அரசவைக்குள் நுழைகின்றனர். இளந்திரையன் அரியணையில் அமர்கிறான். ஔவையாரும் அருகில் இருந்த இருக்கையில் அமர்கிறார்)

ஔவை : அரசே! இவ்வளவு படைக்கருவிகளை நான் ஒரே இடத்தில் பார்த்தது இல்லை. எல்லாக் கருவிகளும் புத்தம் புதியதாக உள்ளன. அவை பளபளவென்று மின்னுகின்ற காட்சி என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது.

இளந்திரையன் : இவ்வளவு பெரிய படைக்கலக் கொட்டில் வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியாது. இத்தனை படைக் கருவிகளை ஒரே இடத்தில் வேறு எங்கும் பார்க்க முடியாது.

ஔவை : அரசே! நீர் சொல்வது உண்மை. தமிழ் நாடெங்கும் நான் சுற்றி இருக்கிறேன். எந்த நாட்டிலும் இவ்வளவு பெரிய படைக்கலக் கொட்டிலைப் பார்க்கவில்லை. எத்தனைப் படைக்கருவிகள் வரிசை வரிசையாக அழகாக வைக்கப்பட்டு உள்ளன.

இளந்திரையன் : போர்க் கருவிகள் பற்றாக்குறையே இங்கு இல்லை. அவை ஏராளமாக உள்ளன. கூர்மையும் வலிமையும் வாய்ந்த இந்தப் படைக் கருவிகளை எடுத்துக் கொண்டு எங்கள் வீரர்கள் போருக்குப் புறப்பட்டால் யாரால் அவர்களை எதிர்த்து நிற்க முடியும்?

ஔவை : எதிர்த்து நிற்க முடியாதுதான்.

இளந்திரையன் : என் படைக்கலக் கொட்டிலைப் பார்த்து வியந்து நின்றீர்களே. அதியமானின் படைக்கலக் கொட்டில் எப்படி இருந்தது என்று சொல்லுங்கள்?

ஔவை : (தனக்குள்) ஏராளமான படைக் கருவிகள் உள்ளன என்று பெருமைப்படுகிறீர்? உங்களுக்கு நல்லறிவு புகட்டுகிறேன்

ஔவை : அரசே! அதியமானின் படைக்கலக் கொட்டிலில் சில போர்க் கருவிகளே கிடந்தன. அந்தப் போர்க்கருவிகளும் கூர் மழுங்கியும் முனை வளைந்தும் குருதிக் கறை படிந்தும் காட்சி அளித்தன.

அலகு 3

[redacted]

புகழைப் பரப்பி உள்ளது.

இளந்திரையன் : (தனக்குள்) அதியமானைப் பற்றிக் குறைவாக அல்லவா மதித்து விட்டோம். ஔவையார் சொல்வதைப் பார்த்தால் அவன் வீரர்கள் வீரம் மிகுந்தவர்கள். படைப் பயிற்சி மிக்கவர்கள். பல போர்க்களங்களைக் கண்டவர்கள் என்பது உறுதி ஆகிறதே. அது மட்டுமல்ல போர்க் கருவிகளை அழகுப் பொருளாக வைத்திருப்பவன் என்று என்னைக் குறிப்பாகக் கேலி செய்துள்ளாரே. வெற்றி எளிதில் கிடைக்கும் என்றால் போர் செய்யலாம். ஔவையார் இங்கு வந்து என்னைக் குழப்பி விட்டாரே. என்ன செய்வது என்பது குறித்து அவர் அறிவுரைக் கேட்போம் (தயக்கத்துடன்) ஔவையாரே!



ஔவை : அரசே! எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேளுங்கள்.

அலகு 3

[redacted]

ஒளவை : அரசே! அதியமானின் மீது போர்த் தொடுக்கும் முயற்சியைக் கைவிடுக. நீங்கள் இருவரும் நண்பர்கள் ஆகுங்கள். இதனால் உங்கள் இருவர் நாடும் வளம் பெறும். நாட்டு மக்கள் உம்மை வாழ்த்துவார்கள். உம் புகழ் உலகெங்கும் பரவும். நான் இங்கு வந்ததன் நோக்கமே உங்கள் இருவருக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்துவதுதான்.

இளந்திரையன் : தங்கள் அறிவுரையை நான் மீறுவேனா? இனி நானும் அதியமானும் நண்பர்களாக இருப்போம். இந்த இரு நாடுகளுக்கு இடையே இனிமேல் போரே நிகழாது.

ஒளவை : போரை விட அமைதியே சிறந்தது என்பதை உணர்ந்து கொண்டீர். போரைத் தவிர்த்த உம் செயலால் இரு நாட்டு மக்களும் மகிழ்ச்சி அடைவார்கள். உம் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.



## செயல்பாடுகள்

- நாடகத்தில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது? ஏன்? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- நாடகக் காட்சிகளை உரைநடையாக எழுதுங்கள்.
- நாடகம் உலகம் பற்றிக் கருத்தரங்கம் நடத்தக் கருத்தரங்குக் குறிப்பு தயாரியுங்கள்.





அலகு

4

# சின்னஞ்சிறு மலர்கள்

இளமையில் கல் என்பது முதுமொழி. இலவசக் கல்வி - எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும். அதைக் கொடுக்க வேண்டியது நமது கடமை. கல்வியோடு இணைந்து நல்லெண்ணங் களையும் கற்றுத் தர அமைக்கப்பட்டதே இவ்வலகு. தன்னம்பிக்கை உணர்வையும், சமூகச்சீர்த்திருத்தக் கருத்துகளையும் மாணவர்களிடம் ஏற்படுத்துவதே இந்த அலகின் நோக்கம்.

**முதன்மைக் கற்றல் அடைவுகள் :**

- சமூகச்சீர்திருத்தக் கதை, கவிதை, கட்டுரை போன்றவற்றின் கருத்தைப் புரிந்து கொண்டு சரியான உச்சரிப்புடனும், சரளமாகவும் வாசிக்கிறார்கள்.
- சமூகக் கொடுமைகளுக்கு எதிரான விண்ணப்பக் கடிதங்கள் எழுதுகிறார்கள்.
- சமூகச்சீர்திருத்தக் கருத்துகள் அடங்கிய முத்திரை வாக்கியங்கள் தயாரிக்கிறார்கள்.
- தகவல்கள் திரட்டி, கட்டுரைக் குறிப்புகள், சொற்பொழிவுக் குறிப்புகள் தயார் செய்கிறார்கள், எழுதுகிறார்கள்.



# நண்பனே.. நண்பனே...

**படுதலம் சுகுமாரன்**

அன்று நான்காவது நாளாக மூர்த்தி பள்ளிக்கு வரவில்லை. எல்லோரும் ரவியைத் தான் விசாரித்தனர். ஆசிரியர் கூட ரவியிடம், "எங்கேடா உன் தோஸ்த்தைக் காணோம்" என்று கேட்டார்.

ரவிக்குக் காரணம் தெரியவில்லை. அவன் ஊரைக் கடந்து தான் மூர்த்தியின் கிராமத்துக்குப் போக வேண்டும். ஒரே ஒரு முறைதான் ரவி அங்கே போய் இருக்கிறான். குடிசை வீடு. மூர்த்தியின் பெற்றோர் ரவியின் அப்பாவுக்குச் சொந்தமான செங்கல் சூளையில் வேலை பார்க்கிறார்கள். தனது மகன் மூர்த்தியை எப்படியும் படிக்கவைத்துவிட வேண்டும் என்பது அவர்கள் ஆசை.



தினமும் பள்ளிக்குக் கிளம்பும் ரவி, கூட்டு ரோடில் மூர்த்தியின் வரவுக்காகக் காத்திருப்பான். ரவியின் அப்பா, அவனை பஸ்ஸில் போகும்படி பணம் கொடுத்து அனுப்புவார். மூர்த்தியுடன் சேர்ந்து போக முடியாது என்பதாலேயே பஸ் பயணத்தைத் தவிர்த்து விட்டு, நடந்தே வருவான் ரவி. மூர்த்தியோடு சேர்ந்து செல்வது ரவிக்குச் சுகமான அனுபவம். பாடம் சம்பந்தமாகவும் சில நேரம் வேடிக்கைக் கதைகளும் பேசிக் கொண்டு நடப்பார்கள். வகுப்பிலும் பக்கம் பக்கமாகத்தான் அமர்வார்கள்.

மூர்த்தி ஒரு நாள் வராவிட்டாலும் ரவிக்கு என்னவோ போல் இருக்கும். நான்கு நாட்கள் பார்க்காததில் தாங்க முடியவில்லை. ஒரு வேளை அவனுக்கு உடம்பு முடியாமல் போயிருக்குமோ? என்று யோசித்தான். சாப்பாடு சரியாக இறங்கவில்லை. இரவு எல்லாம் மூர்த்தி நினைவாகவே இருந்தது.

விடிந்ததும் அம்மாவிடம் சொல்லி விட்டு மூர்த்தியைப் பார்த்து வர கிளம்பினான் ரவி.

தனியாகப் போகாமல், நண்பர்கள் குரு, சிவாவையும் சேர்த்துக்

கொ[redacted] ஆகி இருக்கும் என்று விவாதித்துக்
கொ[redacted] செய்தனர்.

மூ[redacted] வீடு பூட்டி இருந்தது. பக்கத்து வீட்டுப்
பா[redacted] ‘‘அவன் இனி மேல் பள்ளிக்கூடம்
வர[redacted] ஆத்தாளோட சேர்ந்து செங்கல்
சே[redacted] என்று சொன்னார் பாட்டி.

“ரவி [redacted] தெரியுமா?” என்று கேட்டான்
சி[redacted]

“தெ[redacted] ரவி.

வ[redacted] கொண்டு இருந்தது சேம்பர்.
ஆ[redacted] அச்சில் போட்டுக் கல் அறுத்துக்
கொ[redacted] இருந்து புகை எழும்பிக்
கொ[redacted] சிறியதாக ஆபீஸ் இருந்தது.
செ[redacted] லாரிகள் இருந்தன.

ரவி, [redacted] நுழைந்தான். “இங்கே
மூ[redacted] பார்க்கிறானா?’’ என்று
கே[redacted]

அ[redacted] தெரிந்து இருந்தது.
“உ[redacted] பையன்களைச்
சே[redacted] போகாம ஊர்
சு[redacted] தோலை
உ[redacted]

“அ[redacted] இப்ப
மூ[redacted] என்று
அ[redacted]



“செ[redacted]
பா[redacted]

நண்பர்களைப் பார்த்ததும் மூர்த்திக்குச் சந்தோஷமாகிவிட்டது. மண்ணை மிதிப்பதை நிறுத்தி அவர்களிடம் விரைந்தான். அவனை அந்தக் கோலத்தில் பார்க்க வருத்த மாக இருந்தது. “ஏன் மூர்த்தியை ஸ்கூலுக்கு அனுப்பவில்லை?” என்று மூர்த்தியின் அப்பாவிடம் கேட்டான் ரவி.

அவரோ கவலை தோய்ந்த குரலில் “என்ன பண்ணட்டும் தம்பி! முன்பு இவன் அக்கா வேலைக்கு வந்துட்டு இருந்துச்சு. கல்யாணம் முடிஞ்சு போயிருச்சு, கல்யாணத்துக்கு

இருபதாயிரம் பணம் கை நீட்டி வாங்கிட்டோம்" என்றார்.

"என்னை எப்படியாவது இங்கே இருந்து கூட்டிக்கிட்டு போயிடு ரவி. எனக்கு இந்த வேலை பிடிக்கலைடா. படிக்கணும்னு ஆசையை இருக்குடா" என்று ஏக்கத் துடன் சொன்னான் மூர்த்தி.

"கவலைப்படாதே அப்பாகிட்ட பேசி ஒரு வழி பண்றேன்" என்று திரும்பினான்.

ரவியின் அப்பா முருகேசன், திட்டவட்டமாக மறுத்தார். "அந்த மூர்த்தி உன் நண்பனாக இருக்கலாம். அதுக்காகப் பார்த்தால் பணம் நட்டம் உண்டாகும். அவனவன் தலைவிதிப்படி நடக்கும். நீ உன் வேலையைப் பார்" என்று சொல்லி விட்டார்.

ஒரு வாரம் கழிந்த நிலையில், வீட்டில் இருந்த முருகேசனுக்குச் செங்கல் சூளையில் இருந்து போன் வந்தது. "சீக்கிரம் வாங்க அதிகாரிகள் ரெய்டுக்கு வந்திருக்காங்க" என்றதும், வண்டி எடுத்துக் கொண்டு விரைந்தார்.

அங்கே, அரசாங்க ஜீப் நின்றிருந்தது. அதிகாரிகள் இருந்தனர். "நாங்க குழந்தைத் தொழில் ஒழிப்புத் துறையில் இருந்து வர்றோம். உங்க சேம்பரில் சின்னப் பையன்களை வேலைக்கு வெச்சு இருக்கிறதாப் புகார் வந்தது. வந்து பார்த்ததில் மூர்த்தி என்ற சிறுவன் உள்ளிட்ட மூவரை மீட்டோம். இவர்களை வேலையில் அமர்த்தியது சட்டப்படி குற்றம். இதற்குப் பத்தாயிரம் அபராதம் கட்ட வேண்டும். மறுத்தால் ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை" என்றார்கள்.

வெலவெலத்துப் போன முருகேசன், அதிகாரிகளைக் கெஞ்சி, "கைது நடவடிக்கை என் மரியாதையைக் குறைக்கும் அபராதத்தைக்



கட்டிடுறேன் பசங்களையும் அனுப்பிடுறேன்" என்றார்.

மூர்த்தி மீண்டும் பள்ளிக்கூடம் வந்தது மகிழ்ச்சியாக இருந்தது. "இனி படிக்கவே முடியாதோனு பயந்தேன். எப்படியோ விடுதலை கிடைச்சது" என்றான்.

"எப்படியோ இல்லைடா. எல்லாம் ரவியால்தான். அவன் எவ்வளவு வேண்டியும் அவன் அப்பா உன்னைச் சூளையில் இருந்து விடுவிப்பதாக இல்லை. அப்போது, சிறார் தொழில்முறை ஒழிப்புத் துறை பற்றிய செய்தி ஒண்ணு பத்திரிக்கையில் வந்தது. அதைப் படித்ததும், ரவி புகார் எழுதிப் போஸ்ட் பண்ணிட்டான். அதன் விளைவுதான் அதிகாரிகள் நடவடிக்கையும் உன் விடுதலையும்" என்றான் குரு.

ரவியைப் பெருமையுடன் பார்த்தான் மூர்த்தி. "எனக்காக அப்பான்னும் பார்க்கமா புகார் பண்ணி இருக்கியே, நன்றிடா" என்றான்.

"தப்பு செய்தவங்க யாராக இருந்தாலும் திருத்துவதற்கு நம்மால் ஆன முயற்சியைப் பண்ணணும். அந்த வகையில் நான் செய்த முயற்சிக்குப் பலன் கிடைச்சது. இதை மனசோடு வெச்சுக்கங்கடா, அப்பா காதுக்கு எட்டினா என் கதை கந்தலாயிடும்" என்று அபிநயித்தான் ரவி.

நண்பர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.



## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்...

- மூர்த்தியை அவனது பெற்றோர் செங்கல் சூளைக்கு வேலைக்கு அனுப்பக் காரணம் என்ன?
- மூர்த்தியை வேலைக்கு அனுப்பியதால் அவனுடைய எந்தெந்த உரிமைகள் மறுக்கப்பட்டன?
- ரவி அவனது தந்தைக்கு எதிராகச் செயல்படக் காரணம் என்ன?
- நமது சமூகத்தில் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பும் சூழல் தற்போதும் உள்ளது. இதற்கு எதிராகப் பாலர் தொழிலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி ஒரு கோரிக்கை மனு எழுதுங்கள்.
- குழந்தைத் தொழில் ஒழிப்பை வலியுறுத்தி முத்திரை வாக்கியங்கள் எழுதுங்கள்.

# புதுமை பூக்கட்டும்

புதுமை எண்ணம் பூக்கட்டும்
பொதுமை வாழ்வே மலரட்டும்
புதுமைச் செயலே ஆளட்டும்
பொல்லாச் செயல்கள் மாளட்டும்
புதுமையான ஆக்கங்கள்
பொழுதும் ஓங்கிப் பெருகட்டும்
புதுமை புதுமை என்றெங்கும்
பொலிந்து நலமே காட்டட்டும்

ஏற்றத்தாழ்வு மாற்றங்கள்
எல்லாம் ஓடி ஒளியட்டும்
போற்றத் தக்க போக்கெங்கும்
பூத்துப் பொலிந்தே மிளிரட்டும்
மாற்றத் தக்க மடமைகளை
மாற்றி வெற்றி ஆளட்டும்!
தூற்றிப் பேசும் போக்கெல்லாம்
துளியும் இல்லா தொழியட்டும்!





என்றும் இனிய ஏற்றங்கள்
ஏற்றம் பெற்றே பெருகட்டும்
குன்றாக் குறளின் சிறப்பெல்லாம்
குமுகம் போற்றப் பரவட்டும்
அன்பு அமைதி வழியொன்றே
அகிலந் தன்னை ஆளட்டும்
என்றும் புதுமை எண்ணங்கள்
இனிதே இனிதே பூக்கட்டும்.

**துரை. மூர்த்தி**

அலகு 4



## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்.

- பாடலுக்கு மெட்டமைத்துக் குழுவாகப் பாடுங்கள்.
- கீழ் வரும் சொற்களுக்குச் சொல்லகராதி பார்த்துப் பொருளைக் கண்டு பிடியுங்கள். மாளட்டும், ஆக்கங்கள், மிளிரட்டும், மடமை, தூற்றி, குமுகம்.
- புதுமை எவ்வாறெல்லாம் மலர வேண்டும் எனக் கவிஞர் கூறுகிறார்?
- இக்கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன்?

# கைகள் எதற்குக் கண்மணியே...

திருமணத்திற்குப் பின் சூன்யமான பல ஆண்டுகள். ஒரு குழந்தைக்காக வேண்டாத தெய்வங்களில்லை, போகாத கோவில்கள் இல்லை, நடத்தாத பூஜைகள் இல்லை. இறுதியில் மாவேலிக்கரை அறுநூற்றி மங்கலத்தில் மகிழ்ச்சியின் வாணவேடிக்கை நிகழ்த்தி அந்த விருந்தாளியின் வருகையின் அறிகுறிகள் தென்பட்டன. நீண்ட பத்து மாதக் காத்திருப்பின் இறுதியில் கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மகப்பேறு அறையில் பிறந்த குழந்தையைப் பார்த்து அதிர்ச்சியுற்றாள் வாய்விட்டு அலறினாள். எத்தனையோ அழுகைக் குரல் கேட்டுக் கண்ணீர் வடித்த அறைகள் கூட அன்று உள்ளம் உருகி மரத்துப் போய் நின்றிருக்கும். அப்பச்சிளம் குழந்தையை அந்தத் தாய் ஒரு முறைதான் பார்த்தாள். இரண்டு கைகளும் இல்லாமல் முழு வளர்ச்சியும் இல்லாமல் கால்கள் மட்டுமாக ஒரு பெண்குழந்தை.

இருபத்தியெட்டாம் நாள் தாத்தா பரமேஸ்வரன் பிள்ளை மார்போடு அணைத்துக் கொண்டு அக்குழந்தையின் காதுகளில் கண்மணி என்றழைத்தார். பின்பு உறவினர்களிடம் இவளை நாம் கண்ணின் இமை போலப் பாதுகாக்க வேண்டும். அப்படிக் கண்மணி அக்கிராமத்தின் பொன்மணியாக வளர்ந்தாள்.

பின்பு அவளைப் பள்ளியில் சேர்க்க முற்பட்ட போது குறைகளைச் சுட்டிக்காட்டி அவளைப் பள்ளியில் சேர்க்க மறுத்தனர். பொறுப்பிலிருந்து நழுவிக்கொண்டனர். ஆனால் அறுநூற்றி மங்கலம் மழலையர் பள்ளியின் ஆசிரியர்கள் கை இல்லாத கண்மணியை ஏற்றுக் கொண்டு இருகரம் நீட்டி வரவேற்றனர்.



நண்பர்கள் ஆடிப்பாடிப் பள்ளிக்கு வரும் போது ஸ்கூட்டரின் இருக்கையின் முன்பக்கத்தில் நின்று வயிறு வழியாகச் சுடிதார் துப்பட்டாவை அம்மாவின் உடலுடன் சேர்த்துக் கட்டிக் கொண்டு தான் பயணம்.

சிறுமலர் பள்ளி ஆசிரியை லோலம்மா கண்மணியின் திறமைகளைக் கண்டறிந்து கால்களால் அழகான எழுத்துகளை எழுதவும், ஓவியங்கள் வரையவும் பயிற்சி அளித்தார். ஆசிரியையைக் கூட

[redacted]



கண்மணிக்கு விருப்பமானவை ஆகும். படிப்பிலும் கண்மணி சிறந்து விளங்கு கிறாள். காலால் எழுதும் அவளது எழுத் துகள் பார்ப்பதற்கு மிக அழகாக இருக் கின்றன. வீட்டில் இருந்து பள்ளிக்கும்

அலகு 4

பள்ளியில் இருந்து வீட்டிற்கும் அவளை அழைத்துச் செல்வது ஆசிரியை பிந்து ஆவார். அவளைப் பற்றிப் பேசும் போது ஆசிரியைக்கு நூறு நாக்குகள் முளைத்து விடும். கண்களில் இனம் தெரியாத ஒளி பரவும்.

கண்மணியைச் சிறப்புப் பள்ளியில் சேர்ப்பதில் அம்மா ரேகாவுக்கு உடன்பாடு இல்லை. அது தனிமை உணர்வை ஏற்படுத்தக் கூடும் என்பதே அவரின் எண்ணம். சிறந்த வாசிப்புப் பழக்கமுள்ளவள். தன்வரலாற்றின் மீது பற்று அதிகம். ஆன்பிராங்கை வாசித்து வருத்தப்பட்டாள். கெலன் கெல்லரை நினைத்து பெருமைப்படுவாள். கண் மணியின் எதிர்காலம் பற்றிக் கேட்கும் போது ரேகாவின் கண்கள் பனித்தன. வீட்டின் உள்ளே இருந்து கொண்டு கண்மணி கீ போர்ட் வாசிக்கிறாள். துயரக் கடல் மடையென பாய்கிறது. சேற்றில் மலர்ந்த செந்தாமரை மொட்டைப் போல் கண்மணியின் இன்முகம் அவ்வளவு துயரத்திலும் ஜொலித்து நிற்கிறது.

**– நன்றி : மலையாள மனோரமா**





## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்...

- உடல் ஊனமுற்ற கண்மணி வாழ்வில் எவ்வாறெல்லாம் முன்னேற்றம் அடைந்தாள்?
- கண்மணி போன்ற குழந்தைகளுக்கு உங்களால் என்னென்ன உதவிகள் செய்ய முடியும்?
- கண்மணியின் வாழ்விலிருந்து நாம் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகள் யாவை?
- “ஒளி மிகுந்த வாழ்விற்கு ஊனம் ஒரு தடையன்று” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தத் தேவையான குறிப்புகளை உள்ளடக்கிக் கட்டுரை தயாரியுங்கள்.

# நாடு....!

அறம்நாடு அருள்நாடு அன்பைநாடு
அடக்கத்தை ஆள்வினையை அறிவைநாடு
திறம்நாடு தெளிவான கொள்கைநாடு
திட்டமிட்டுச் செயலாற்றும் திட்பம்நாடு
இறவாத புகழ் நாடு எளிமை நாடு
எல்லார்க்கும் வழங்குகின்ற ஈகை நாடு
சிறந்துயர்ந்து பெருமை பெறும் வழிகள் நாடு
செய்ந்நன்றி மறவாத சீர்மை நாடு

இன்சொல்லை நற்பண்பை என்றும் நாடு
இரக்கத்தை ஒப்புரவை இனிதே நாடு
நன்மையினைப் பிறர்க்காற்றி நட்பை நாடு
நாடுமொழி காக்கின்ற உணர்வை நாடு
உண்மையினை ஒழுக்கத்தை உயர்வாய் நாடு
உறவோரை மதிக்கின்ற தகைமை நாடு
புன்செயல்கள் புறந்தள்ளிப் பொதுமை நாடு
புலமையினால் பிறர் நெஞ்சில் இருப்பை நாடு

வல்லவனாய் வரலாறு படைக்க நாடு
வருங்காலம் வியப்படவே வளமை நாடு
கல்லாமை இல்லாமை நீங்க நாடு
கடமையினை நிறைவேற்றும் கருத்தை நாடு
பொல்லாத பழிகளைந்து பொறுமை நாடு
புத்தகச் சிந்தனையில் புரட்சிப் புதுமை நாடு
நல்லவனாய் வாழ்கின்ற எண்ணம் நாடு
நல்லுழைப்பு முயற்சியினால் வெற்றி நாடு



**முனைவர் கடலூர் மணிமாறன்**



## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டுடன் பாடுங்கள்.
- கவிதையில் குறிப்பிடும் கருத்துகளைக் கலந்துரையாடுங்கள்; குறிப்பு எழுதுங்கள்.

# மனமிருந்தால் மார்க்கம் உண்டு!

– ஆர்.ஜி.அம்பிகை ராமன்

சே, நம்ம காந்தி தெரு மட்டும் இப்படிச் சுகாதாரக்கேடாக இருக்குதே! தெருவில் வழிந்தோடும் கழிவு நீர், தெரு முழுவதும் குப்பைக் கூளங்கள் என்று ஆட்கள் நடமாட முடியாத அளவுக்குத் தெரு அசுத்தமாக இருக்குதே... என்று மனதுக்குள் வருந்திய வாறே வெள்ளிக்கிழமை மாலை வீடு நோக்கிச் சென்றார் ஆசிரியர் ரெங்கராஜன். இதற்கு விரைவில் ஒரு நல்ல தீர்வு காணவேண்டும் என்றும் மனதில் எண்ணினார். வீட்டிலும் இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு டக் கென்று ஒரு எண்ணம் தோன்றியது. உடனே தன் மகன் பாரதியை அழைத்தார். "பாரதி நீ நாளைக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும். நாளைக்குச் சனிக்கிழமை. நம்ம தெருவில் வசிக்கும் மாணவர்கள் எல்லாம் விடுமுறையில்தான் இருப்பார்கள். அவர்களை எல்லாம் நாளை காலை பத்து மணிக்கு நம் வீட்டுக்கு நீ அழைத்து வர வேண்டும்"என்றார் ரெங்கராஜன்.

"எதுக்குப்பா ...?" என்று சற்றுக் குழப்பத்துடன் தன் அப்பாவைக் கேட்டான்.

"உனக்கும் நாளைக்கே சொல்றேன்" என்று சொல்லிவிட்டுப் படுக்கை அறைக்குச் சென்றார் ரெங்கராஜன்.

மறுநாள் காலை மணி பத்து.

தெருவில் வசிக்கும் சுமார் இருபது மாணவர்கள் ஆசிரியர் வீட்டில் கூடியிருந்தனர். "ஆசிரியர் எதற்காக நம்மை வரச்சொல்லி இருப்பார்" என்று மாணவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். ஆசிரியர் ரெங்கராஜன் சிரித்த முகத்துடன் மாணவர்கள் முன் வந்து அமர்ந்தார். "மாணவர்களே! நாம் எல்லோரும் சுற்றுப்புற சுகாதாரம் பற்றிப் படிக்கிறோம். ஆனால் நம் தெரு சுத்தமாக இருக்கிறதா?" என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார் ரெங்கராஜன்.





[redacted] என்று மா[redacted]ரும் கோ[redacted]

“ச[redacted]ாம் தா[redacted]க் கொ[redacted]. அத[redacted] உங்[redacted] யம் [redacted] அ[redacted] கே[redacted] சஸ்[redacted]டு மா[redacted]தைக் கவ[redacted]

[redacted]தோ நல்ல வி[redacted]றார் என்று மா[redacted]ன் எதிர் பா[redacted]

தொ[redacted]

பொ[redacted] அவ[redacted] தெ[redacted]

[redacted]

போ[redacted] இரு[redacted] ஒரு [redacted] போதும். நம்ம தெருவைச் சுத்தப்படுத்தி விடலாம். உங்களால் நேரம் ஒதுக்க முடியுமா?” என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்டார் ரெங்கராஜன்.

“கண்டிப்பாக முடியும் சார்” என்று மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

"சார், ஞாயிற்றுக்கிழமை அந்த ஒரு மணிநேரத்தில் நாம் என்ன செய்யப்போகிறோம்? ஒருமாணவன் கேள்வி கேட்டான்.

"ஒரு வீட்டுக்கு ஐந்து செடிகள் என்ற வீதத்தில் உங்களுக்குச் செடிகள் தருகிறேன். அதை உங்கள் வீட்டின் முன்புறமோ, பின்புறமோ நட்டு வையுங்க. அதுக்குத் தண்ணீர் ஊற்றிப் பராமரிக்க வேண்டும். நீங்கள் குளிக்கிற தண்ணீரை எல்லாம் செடிகளுக்குச் சென்று சேரும்படி பாதையை ஏற்படுத்துங்கள். வீடுகளில் காய்கறி, பாத்திரம் கழுவுகிற தண்ணீரை எல்லாம் ஒரு வாளியில் தனியாக வைக்குமாறு உங்க அம்மாவிடம் சொல்லுங்க. பள்ளி விட்டு வந்ததும் வீட்டில் சேகரிக்கப்பட்டிருக்கும் கழிவுத் தண்ணீரை எடுத்துச் செடிகளுக்கு ஊற்றுங்கள். இதனால் கழிவுநீர் தெருவுக்கு வராது. அதேமாதிரி வீட்டில் சேருகிற காகிதம், பிளாஸ்டிக் கவர்கள் உள்ளிட்ட குப்பைகளைச் சேகரித்துக் குப்பைத் தொட்டியில் போடுங்கள். தெருவில் இருக்கும் குண்டுகுழிகளை எல்லாம் மண்ணைப் போட்டு மூடுங்கள். இந்தப் பணிகளைத்தான் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் செய்யப்போகிறோம். இதை நாளையில் இருந்தே செய்யப் போகிறோம்" என்று ரெங்கராஜன் சொல்லி முடித்தார். இதைக் கேட்டு மாணவர்கள் எல்லாரும் உற்சாகத்தில் கை தட்டினர்.

"சரி, நாளை காலை என் வீட்டுக்கு வாருங்கள். அதற்குள் உங்களுக்குத் தேவையான செடிகளை எல்லாம் ஏற்பாடு செய்து வைக்கிறேன்" என்றார் ரெங்கராஜன்.

அடுத்த நாளில் இருந்து தெருவைச் சுத்தப்படுத்தும் பணிகள் தொடங்கின. ஒரு சில வாரங்களிலேயே காந்தித் தெரு சுத்தமாகக் காட்சியளித்தது. அந்தத் தெரு மக்கள் அனைவரும் ஆசிரியரையும் மாணவர்களையும் வெகுவாகப் பாராட்டினர்.

இதே போல் நம்ம தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று பக்கத்துத் தெரு மாணவர்களும் செயலில் இறங்கினர்.





ஒரு சில மாதங்களில் காந்தி தெரு உள்பட பல தெருக்களும் மரம் செடி கொடிகளுடன் பார்க்கவே பசுமையாகவும் சுத்தமாகவும் இருக்க, அந்த ஊரே பளிச்செனக் காட்சியளித்தது.

இப்போது தெருவில் நடந்து செல்லும் போதெல்லாம் தம் மாணவர்களைப் பெருமையுடன் நினைத்துக் கொள்கிறார் ஆசிரியர் ரெங்கராஜன்.

அலகு 4

## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்.

- ஆசிரியர் ரெங்கராஜன் தெருவைச் சுத்தம் செய்ய மகன் பாரதியின் நண்பர்களை அழைக்கக் காரணம் என்ன?
- தினமும் ஒருமணி நேரம் வீடு, பள்ளிச் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்ய நீங்கள் என்னென்ன செயல்களை மேற்கொள்வீர்கள்?
- "குப்பைகளை ஒழிப்போம்! சுற்றுப்புறம் காப்போம்!" என்ற தலைப்பில் உரையாற்ற ஒரு சொற்பொழிவுக் குறிப்பு எழுதுங்கள்.
- அக்டோபர் 2 இல் காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டுத் "தூய்மை இந்தியா" ஊர்வலம் நடைபெற உள்ளது. அதற்குத் தேவையான முத்திரை வாக்கியங்களை உருவாக்குங்கள்.

## வினா எழுத்துகள்

அவன் முடித்தான்

அவனா முடித்தான்

இந்த இரண்டு வாக்கியங்களுக்கிடையே என்ன வேறுபாடு உள்ளது?

முதல் வாக்கியம் ஒரு செய்தி.

இரண்டாவது வாக்கியம் ஒரு வினாவை எழுப்புகிறது. செய்தியை வினாவாக மாற்றிய எழுத்து எது?

ஆ

இதுபோல நாம் ஏராளமான வினாக்களைக் கேட்க 'ஆ' என்ற எழுத்து உதவுகிறது.

நீயா? நானா?

இன்று பள்ளி உண்டா? விடுமுறையா?

இதுபோல வேறு சில எழுத்துகளும் வினாக்களை உருவாக்க உதவுகின்றன.

அவை எ, ஏ, யா, ஓ

விடை என்ன?

ஏன் கொடுக்கவில்லை?

யார் உடைத்தார்?

நீயோ எழுதினாய்?

இதுபோல வினாக்கள் உருவாகின்றன.

இப்படி வினாக்களை உருவாக்கும் ஆ, எ, ஏ, யா, ஓ என்னும் எழுத்துகள் வினா எழுத்துகள் என அழைக்கப்படுகின்றன.

இவற்றில் எ, யா என்னும் எழுத்துகள் சொற்களுக்கு முதலில் வந்து வினாவை உருவாக்குகின்றன.

கதையை எழுதியது யார்?

உன் பெயர் என்ன?

காரணம் என்ன?

ஆ, ஓ என்னும் எழுத்துகள் சொற்களுக்கு இறுதியில் வந்து வினாவை உருவாக்குகின்றன.

எழுதியது நீயா?

பாடியது அவரோ?

அலகு
5

# வளம் தரும் வாழ்வு

ஓடி விளையாடு பாப்பா என்றார் மகாகவி. தொலைக்காட்சிப் பெட்டி, கணினி போன்ற நவீன அறிவியல் வளர்ச்சியால் இளம் வயதிலேயே வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் மாணவர்களுக்கு விளையாட்டையும் உடற்பயிற்சியையும் உணரச் செய்ய வேண்டும். ஆரோக்கிய வாழ்வு, நாம் இழந்து கொண்டிருக்கும் பல விளையாட்டுகள். ஆகியவற்றைத் தெளிவுபடுத்தும் கருத்தலகுகள் இவ்வலகில் இடம்பெறுகின்றன.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- ஆரோக்கியம், உடற்பயிற்சி தொடர்பான நபர்களைப் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயாரிக்கிறார்கள்.
- நிகழ்ச்சி விளம்பரத்துக்கான துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் தயாரிக்கிறார்கள்.
- கதை நிகழ்வுகளை உரையாடல் வடிவில் எழுதுகிறார்கள்.
- ஆரோக்கியம், உடற்பயிற்சி, விளையாட்டுகள் பற்றிய செய்திகள், படங்கள் சேகரிக்கிறார்கள், கட்டுரை எழுதுகிறார்கள்.
- விளையாட்டுகள் பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் சேகரிக்கிறார்கள், எழுதுகிறார்கள்.
- உடல்நலம் பற்றிய பழமொழிகள், பொன்மொழிகள் எழுதுகிறார்கள்.
- ஆரோக்கிய, உடல்நல, விளையாட்டுப் பாடல்களை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.



# ஆடம்பர ஆபத்து

– சூரிய விஜயகுமாரி

பசும்பொன் நகரத்தை ஒட்டி இருக்கும் ஒரு சிற்றூர். அழகான அந்தச் சிற்றூரில் வாழும் மக்களுள் ஒரு சிலர் உழவுத் தொழில் மேற்கொண்டிருந்தனர். பெரும்பாலோர் அருகில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்தனர்.

பொன்னி, சரளா, சாவித்திரி என்னும் மூன்று பெண்கள் பல்வேறு ஊர்களிலிருந்து அச்சிற்றூருக்கு வாழ வந்தவர்கள். இவர்களுடைய கணவர் மூவரும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரண்டிரண்டு குழந்தைகள். மூன்று பெண்களுமே நகரத்திலிருந்து வந்தவர்கள், ஆதலால் அவர்கள் தங்களோடு கொஞ்சம் சோம்பேறித்தனங்களையும், ஆடம்பர வாழ்க்கையையும் சீதனமாகக் கொண்டு வந்து விட்டனர். வீட்டிலே தொலைக்காட்சிப் பெட்டி சொந்தமாக இருந்ததால் மூவருக்கும் குடும்பம் நடத்தக்கூட நேரம் போதவில்லை. ஏனென்றால் நாள்தோறும் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்க்கவே அவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது. காலையில் தேயிலைத் தூள் வாங்கி வந்து தேநீர் வைத்துக் கொடுத்து விடுவர்.

எந்தப் பொருள் வாங்க வேண்டும் என்றாலும் தரமானதாகப் பார்த்து வாங்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவதில்லை. விலை மலிவாக எளிதாகக் கிடைக்கும் பொருள்களை வீட்டில் இருந்தபடியே வாங்கிக் கொள்வர். அவற்றின் தரம் பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை.

இரண்டு நாள், மூன்று நாளுக்கு ஒரு தடவை குழம்பு வைத்துப் பிள்ளைகளுக்கும், கணவன் மார்களுக்கும் போட்டு விடுவர்.



குறைந்த விலையில் கிடைக்கும் எந்த மட்டமான பொருளையும் வாங்கிப் பெருமை அடித்துக் கொள்வார்கள். சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதாகத் தற்பெருமையோடு கூறிக் கொள்வார்கள். விலை மலிவாகக் கிடைக்கும் பயன்படுத்தப்பட்ட எண் ணெய். அழுகல் காய்கறிகள், பழங்கள், விலை குறைவாக உள்ள பருப்பு வகைகள், விலை குறைவான மீன், கறி என்று எதையாவது வாங்கி வயிற்றை அடைத்துப் பசி யைப் போகச் செய்வார் களே ஒழிய, இது நல்லது, உடம்புக்கு ஒத்துக் கொள்ளும் என்று பார்த்து எந்தப் பொரு ளையும் வாங்குவதில்லை. அப்படிப்பட்ட முயற்சியும் வீணானது என்பது அவர்கள் முடிவான எண்ணம்.



இவர்கள் மூன்று பேருமே இந்த வகையில் ஒற்றுமையாக இருந்ததால் நல்ல தோழியர்களாக ஆகிவிட்டனர். குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படித்து வந்ததால், தங்கள் தாய்மார்கள் செய்கின்ற தவறுகளைத் தெரிந்து கொண்டனர். அதனால் அவர்கள் தாய்களிடம் முன்னெச்சரிக்கையாகச் சொல்லியும் பார்த்து விட்டனர்.

அவர்களோ சின்னக் குழந்தைகள் தங்களுக்கு அறிவுரை கூறுவதையே வெறுத்தார்கள். வெறுத்ததோடு இல்லாமல் பெரியவர்களுக்கே புத்தி சொல்கிற அளவுக்கு வளர்ந்து விட்டீர்களா? என்று கூறி அடித்து அடக்கி விட்டனர். என்ன செய்வது? பாவம் அந்தப் பிள்ளைகள். அதிலிருந்து அவர்களும் ஒன்றும் சொல்வதே இல்லை.

இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன. தொழிற்சாலையில் வேலை பார்க்கும் மூன்று கணவன்மார்களுக்கும் தங்கள் தங்கள் மனைவிமார்கள் இப்படித்தான் சமையல் செய்து போடுகிறார்கள் என்று தெரியாமலே போய்விட்டது. அவர்கள் வழக்கமாகச் சாப்பிட்டது, ஆல்கஹால் கலந்த பானங்கள், கடுகு எண்ணெயில் செய்த பலகாரங்கள். சமையல் எண்ணெய் என நினைத்துக் கனிம எண்ணெய்யில் செய்த பொருள்கள் ஆகிய பொருள்களை அடிக்கடிப் பயன்படுத்தினர்.

அவர்களுண்டு அவர்கள் வேலை உண்டு என்று இருந்து விட்டனர். ஒரு நாள்

பொன்னியின் கணவருக்கு வயிற்றுப் போக்கு வந்துவிட்டது. அதனால் மருத்துவரிடம் போனால் காசாகும் என்று கை வைத்தியமாகவே செய்து வந்தனர்.

பல நாள்கள் இந்த வயிற்றுப் போக்கு நீடித்தது. அதனால் மருத்துவமனைக்குப் போய்க் காட்டினர். தொடக்கநிலை மருத்துவமனை ஆனதால், அங்கும் வயிற்றுப் போக்கு நிற்கவில்லை. இப்படியே ஒரு மாதம் கடந்து விட்டது. வேறு வழியில்லாமல் பெரிய நகரத்து மருத்துவமனைக்குச் சென்றனர். அங்கு அவருக்கு முழுப் பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது தான் அவர் குடலில் புற்றுநோய்க்கான அறிகுறி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் மருத்துவமனையில் தங்கிப் பலமாதங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டார் மருத்துவர்.

சரளாவின் கணவர் தொழிற்சாலையில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போதே தடுமாறிக் கீழே விழுந்தார். மற்றவர்கள் அவரைத் தூக்கி நிறுத்தினர். அவரோ எனக்குக் கண் பார்வை சரியாகத் தெரியவில்லை என்றார். உடனே அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அவர் கண்களைப் பரிசோதித்தனர். அவருக்கு உடனடியாக கண்களில் அறுவை மருத்துவம் புரிந்தால் தான் பார்வை வரவழைக்க முடியும், இல்லையேல் பார்வை கெட்டுவிடும் என்று மருத்துவர்கள் மருத்துவமனையில் சேர்த்துக் கொண்டனர்.





சாவித்திரியின் கணவருக்கோ இரண்டு நாட்களாகக் காய்ச்சல். எதனால் காய்ச்சல் என்று தெரியாமலேயே ஆஸ்பிரோ, அனாசின் போன்ற மாத்திரைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தார் சாவித்திரி. ஒரு நாள் இரவு படுக்கையில் படுத்த அவர் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே இயலவில்லை. ஒரு பக்கத்து கையும் காலும் அசைக்கக் கூட முடியாமல் படுக்கையில் கிடந்தார். வீட்டுக்கு வந்து பரிசோதனை செய்த மருத்தவர் அவருக்குப் “பக்கவாத நோய் தாக்கி விட்டது உடனடியாக மருத்துவமனையில் சேருங்கள்'' என்று கூறிப் போய் விட்டார். இவரை



யும் மருத்துவமனையில் சேர்த்துவிட்டார்கள்.

மூன்று பெண்களின் கணவர்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டது ஏன் என்று மூன்று பேருக்கும் மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள் கூறினார்கள். அந்த மூன்று காரணங்களும் ஒன்றாகவே இருந்தன.அந்தக் காரணம் என்னவாக இருக்கும்?





## செயல்பாடுகள்

**கலந்துரையாடி எழுதுவோம்.**

- கதையில் மூன்று பெண்களின் கணவன்மார்களுக்கும் இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன? கலந்துரையாடி எழுதுங்கள்.
- நோய்க்கான காரணத்தைப் பற்றி மருத்துவர் என்ன கூறி இருப்பார்? எழுதுங்கள்.
- மருத்துவமனையில் மருத்துவரும், பெண்களும் என்னென்ன கூறியிருப்பார்கள்? உரையாடல் எழுதுங்கள்.
- கதையை வாசித்து அதை நாடக வடிவில் மாற்றி எழுதி நடித்துக்காட்டுங்கள்.
- கலப்படம் பற்றிய செய்திகளைச் சேகரித்து வகுப்பில் வெளியிடுங்கள்.
- என்னென்ன பொருட்களில் என்னென்ன கலப்படம் செய்கிறார்கள் என்பதைப் பற்றிக் கலந்துரையாடித் தொகுத்து வகுப்பில் வெளியிடுங்கள்.

# விரைவு உணவகங்கள்

வேக வேக வேகமாய்
வேக வைத்த உணவையே
கூவிக் கூவி விற்கிறார்
கூட்டம் ஈயாய் மொய்க்குதே!

பாணி பூரி பட்டாணி
பச்சை மிளாகாய் பஜ்ஜியும்
பாதி வெந்த நூடுல்ஸ்சும்
பக்கெட் நிறைய தண்ணீரும்

நாலு சக்கர வண்டியில்
நகர்ந்து எங்கும் போகுதே!
தெருவில் வீசும் காற்றிலே
தெரியும் புழுதி அனைத்துமே



உருளும் வண்டியில் படியுதே
உணவும் விஷமாய் ஆகுதே
கறுப்பு எண்ணெயில் வறுத்ததை
பொறுப்பாய் வாங்கி உண்கிறார்

வேக உணவுக் கடைகளாம்
வேடிக்கையாய் இருக்குதே!
நோயைத் தேடிப் போகிறார் - உடலை
நொந்து போகச் செய்கிறார்

அம்மா சமைத்த உணவிலே
அன்பு கலந்திருக்குமே
நலமாய் என்றும் வாழவே
நமக்கு அது போதுமே.

**- மு.நடராஜன்**





## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்...

- பாடலை இராகத்துடன் தனியாகவும், குழுவாகவும் பாடி மகிழுங்கள்.
- பாடலைப் படித்து விரைவு உணவகங்களைப் பற்றி ஒரு குறிப்பு வகுப்பில் வெளியிடுங்கள்.
- இந்தப் பாடலில் உங்களைக் கவர்ந்த வரிகள் எவை? ஏன் என்று எழுதுங்கள்.
- பாடலில் முதல் எழுத்துகள் ஒன்றி வரும் சொற்களை எடுத்து எழுதுங்கள்.

(எ,கா): கூவி, கூட்டம், ......................

- . . . . . . . . . . . . . . . . . . . . . . .
- . . . . . . . . . . . . . . . . . . . . . . .
- . . . . . . . . . . . . . . . . . . . . . . .

# நடைப் பயிற்சி நல்ல உடற்பயிற்சி



இளைஞர்கள், நடுத்தர வயதினர், முதியோர் ஆகிய அனைவருக்கும் ஏற்ற நல்ல உடற்பயிற்சி, நடைப்பயிற்சி தான். வேகமாக நடப்பது தான் நல்ல பயிற்சியாகும். காலையில் நடப்பது சிறந்தது. காலை நேரத்தில் நடக்க வாய்ப்பில்லாதவர்கள் மாலை நேரத்தில் நடக்கலாம். காலையில் எழுந்து மலஜலம் கழித்து விட்டு ஒரு டம்ளர் தண்ணீர் அல்லது ஒரு டம்ளர் பழச்சாறு குடித்து விட்டு நடக்கலாம்.

காலையில் நடப்பது உடம்பைச் சுறுசுறுப்பாக்கு கிறது. காலையில் அலுவலகத்திலும் மகிழ்ச்சியோடும் புத்துணர்வோடும் வேலை செய்ய முடிகிறது. மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும். கடினமான பிரச்சினைகள், கடினமான காரியங்கள் யாதாயினும் காலையில் அதைப் பற்றி சிந்தித்தால் ஒரு நல்ல முடிவுக்கு வரலாம்.

பெரிய பூங்கா, அகலமான சாலைகள், கடற்கரை,

அலகு 5

ஆற்றங்கரை ஆகியவையே நடப்பதற்கு ஏற்ற இடங்கள், வண்டி வாகனங்கள் செல்லும் சாலைகளில் நடக்கக் கூடாது. வண்டிகளால் ஆபத்து நேரிடலாம். வண்டிகள் விடும் புகைகளும், தூசுகளும் ஒவ்வாமை வியாதிகளான ஆஸ்துமா, தும்மல் போன்ற வியாதிகளை உண்டு பண்ணும். ஏற்கனவே இவ்வியாதிகள் இருந்தால் அவை கடுமையாகி விடும். வேலை செய்யும் திறனைக் குறைக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.

அருகிலுள்ள பூங்காக்களில் நடப்பது தான் பாதுகாப்பனது. வசதியானதும் கூட. ஒரு நாளைக்குக் குறைந்தது 3 கி.மீ. நடப்பது நல்லது. அதற்கு மேலும் நடப்பது அவரவர் திறமையையும் சௌகரியத்தையும் பொறுத்தது.

**சில குறிப்புகள்**

- நடக்கும் போது முடிந்த மட்டும் தனியாக நடப்பது நல்லது. பேசிக்கொண்டு நடக்கும்போது, மன அமைதி குலையும், நடையின் வேகமும் குறையும்
- நேர்கொண்ட பார்வையோடு நிமிர்ந்து நடக்க வேண்டும்.
- கைகளை நன்கு வீசி வேகமாக நடத்தல் நல்லது
- மார்பை நேராக வைத்து நன்கு விரிவடையுமாறு நடக்க வேண்டும்

நடைப்பயிற்சியை மேலை நாடுகளில் ஒரு கட்டாய வேலைபோல் கடைப்பிடித்து வருகிறார்கள்.

நம் நாட்டிலும் நகரங்களில் இது நல்ல பிடிப்புடன் செயல்பட்டு வருகிறது. கிராமங்களில் நமது பெரியோர்கள் காலை எழுந்தவுடன் கழனிக்குச் செல்ல ஒரு கிலோமீட்டர் தூரம் நடப்பது மிகப் பழைய நெறியாகும். வியர்வை கொட்டும் வரை வேகமாக நடப்பது ஆரோக்கியத்திற்கு நல்ல மருந்தாகும். நடப்பது ஒரு நல்ல மருந்து, அதுவும் செலவில்லா மருந்து, அதே சமயம் விலை மதிப்பில்லா அருமருந்து.

**நடைப்பயிற்சியால் ஏற்படும் பலன்கள் :**

1. இரத்த அழுத்தம் குறைகிறது. இரத்த ஓட்டம் வேகமாகும். மனத்திலே எழுச்சியும், மகிழ்ச்சியும் பெருகும். ஒரு வகையான சுறுசுறுப்பும் ஒட்டிக் கொள்ளும். இந்நாள் இனிய நாள் என்ற எண்ணம் தோன்றும். ஒரு நாள் நடக்கமுடியாமல் போய்விட்டால் அன்று முழுவதும் மந்தமாகவும் சோம்பலாகவும் இருக்கும். எந்த வேலையும் சரியாக நடைபெறுவதில்லை.

2. இதயத்திற்கு நல்லது, இதயத்தைக் காப்பாற்றக்கூடிய நல்ல கொழுப்பு (HDL- High Density Lipo Protein) அதிகரிக்கிறது. இது நல்ல பலன். அதே சமயம் இரத்த குழாயில் அடைப்பை ஏற்படுத்தி மாரடைப்பை ஏற்படுத்தக் கூடிய கெட்ட கொழுப்பு குறைகின்றது. இவ்விரண்டும் நல்ல பலன்களே. எனவே, நடப்பது என்பது இதயம் காக்கும் மருந்தாக அமைகிறது.

3. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு நடப்பது என்பது தலையாய கடமையாகும். உடல் எடையைக் குறைக்கவும், பெருகியுள்ள குளுக்கோஸைக் குறைக்கவும் நடைப்பயிற்சிதான் சிறந்த வழி. நீரிழிவு நோய் உள்ளோர் வெறும் வயிற்றில் நடக்கக் கூடாது. வயிறு காலியாக இருக்கும் போது நடந்தால் இரத்தத்தில் சர்க்கரை திடீரெனக் குறையும் வாய்ப்பு உண்டு. தலைச் சுற்றும் மயக்கமும் வரும். அதனால் அவர்கள் ஓரளவு சாப்பிட்ட பிறகு நடப்பதே நல்லது.





## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்...

- நீங்கள் ஏதாவது உடற்பயிற்சி செய்வது உண்டா? கலந்துரையாடுங்கள்.
- நம் ஊர்களில் சாதாரணமாகக் காணப்படும் உடற்பயிற்சிகளைப் பட்டியலிடுங்கள் / தனியாகவும் / குழுவாகவும்.
- நீங்கள் விரும்பும் ஏதாவது ஓர் உடற்பயிற்சி முறையை எழுதுங்கள்.
- உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

# உடலினை உறுதி செய்

– டாக்டர்.கு.கணேசன்

உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் முதலில் சத்துள்ள உணவைச் சாப்பிட வேண்டும். அடுத்து சரியான உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஒரு புதிய சைக்கிளை வாங்குகிறீர்கள். அதை ஓட்டாமல் வீட்டிலேயே வைத்துக் கொண்டால் என்ன ஆகும்? நாளாக ஆக சைக்கிள் துருப்பிடித்து ‘கீரிச்’ என்று சத்தம் போடும். அந்தச் சைக்கிளைத் தினமும் துடைத்து மசகு போட்டு ஓட்டி வந்தால் எப்படி இருக்கும்? அந்தச் சைக்கிள் பயணமே ஓர் அலாதியான ஆனந்தம் தரும். அது போலவே 206 எலும்புகள், 600 க்கும் மேற்பட்ட தசைகள், தசை நார்கள் மற்றும் இருபதுக்கு மேற்பட்ட உள்ளுறுப்புகளால் பிணைக்கப்பட்டுள்ள நம் உடல், உடற்பயிற்சிகளைச் செய்யச் செய்யத்தான் ஆரோக்கியத்துடன் இருக்கும். எலும்பும் தசையும் வலுப்பெற்று மூட்டுகள் நெகிழ்வுத் தன்மை அடைந்து அவற்றின் இயக்கங்கள் எளிதாகி நலம் காக்கும் உடற்தகுதியை நமக்குத் தரும். இதற்குத்தான் உடற்பயிற்சி தேவைப்படுகிறது.

அலகு 5

உடற்பயிற்சிகளில் முக்கியமானது ஏரோபிக்ஸ் பயிற்சிகள். இவை காற்றிலுள்ள ஆக்ஸிஜனை நுரையீரலும் இதயமும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பயிற்சிகள். நடப்பது, ஓடுவது, நீச்சலடிப்பது, சைக்கிள் ஓட்டுவது, கூடைப்பந்து, கால் பந்து, கைபந்து, இறகுப்பந்து, ஹாக்கி, கோகோ,டென்னிஸ், டேபிள்டென்னிஸ், ஸ்கிப்பிங் போன்ற விளையாட்டுகள் எல்லாமே ஏரோபிக்ஸ் பயிற்சிகள்தான்.



இந்தப் பயிற்சிகளை மேற்கொள்ளும்போது நம்உடலில் என்ன மாற்றங்கள் நடக்கின்றன? முதலில் நாம் வேகமாகவும் ஆழமாகவும் சுவாசிக்கிறோம். அப்போது அதிக அளவு ஆக்ஸிஜன் உடலுக்குள் சென்று ரத்தத்தில் கலக்கிறது. ரத்தம் சுத்தமாகிறது. அடுத்ததாக இதயத் துடிப்பு அதிகரிக்கிறது. இதன் பலனால் உடலில் ரத்தம் வேகமாகவும் அதிகமாகவும் சுற்றி வருகிறது. அப்போது சிறு ரத்தக் குழாய்கள் கூட அளவில் பெரிதாகின்றன. உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் ரத்தம் செல்வது அதிகரிக்கிறது. சாதாரணமாக ஒரு நிமிடத்தில் ஐந்து லிட்டர் ரத்தம் நம் உடல் முழுவதும் சுற்றிவரும். நாம்

விளையாடும் போது, இந்த வேகம் ஐந்து மடங்காக உயரும். இதனால் உடலில் உருவாகும் கழிவுகள் விரைவில் வெளியேறிவிடுகின்றன. சீக்கிரமே ரத்தம் சுத்தமாகிறது. உடலின் வெப்பமும் குறைகிறது. உடலும் மனமும் புத்துணர்வு பெறுகின்றன.

தொடர்ந்து தினமும் விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டால் பல நோய்கள் நம்மை அண்டுவதற்கு அஞ்சும். காரணம் விளையாட்டுப் பயிற்சிகள் இதய நோயைத் தடுக்கும்; நுரையீரல்களைக் காக்கும்; சர்க்கரை நோயைக் குறைக்கும்; ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும்; ரத்தக் கொழுப்பைக் குறைக்கும்; பக்கவாத நோயைத் தடுக்கும்; உடல் எடையைக் கட்டுப்படுத்தும்; நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்; மன அழுத்தத்தைக் குறைக்கும்; சோர்வை நீக்கும்; உடலின் ஆற்றலையும் நினைவாற்றலையும் அதிகரிக்கும். ஆக மொத்தத்தில் ஆரோக்கிய வாழ்வுக்கு வழி அமைக்கும்.

தொலைக்காட்சியையே பார்த்துக் கொண்டிருப்பதால் உடலுழைப்பு குறைகிறது. இளம் வயதிலேயே நோய்கள் வந்து விடுகின்றன. ஆரோக்கியமாக வளர உடற் பயிற்சி அவசியம் என்பதை உணர வேண்டும்.





## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்...

- உடல் நலம் பேணச் சத்தான உணவு மட்டும் போதாது உடற்பயிற்சியும் தேவை என்று அறிந்த நீங்கள் ஒரு மருத்துவரிடம் நேர்கோணல் நடத்த வினா நிரல் தயாரிக்கவும்.
- உங்கள் பள்ளிக்குச் சிறப்புரை ஆற்ற மருத்துவர் வருகிறார். இந்தத் தகவலைப் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்த ஒரு துண்டுப் பிரசுரம் தயார் செய்யுங்கள்.
- ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ இதுபோன்ற உடல்நலம், ஆரோக்கியம் உடற்பயிற்சி பற்றிய பொன்மொழிகளைச் சேகரியுங்கள்.

# துள்ளி விளையாடலாம்



எந்த விளையாட்டையுமே அதன் நுணுக்கங்களையும் அடிப்படை விதிகளையும் தெரிந்து கொண்டால் திறமையாக ஆடமுடியும். குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டிகளை நேரிலோ, தொலைக்காட்சியிலோ பார்த்தாலும் நன்றாக ரசிக்க முடியும். உடல் நலமுடன் ஆரோக்கியமாக வாழ உடற்பயிற்சியும், விளையாட்டும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இப்பகுதியில் கூடைப்பந்து விளையாட்டைப் பற்றி உடற்பயிற்சி ஆசிரியரும் மாணவர்களும் கலந்துரையாடுவதைப் பார்ப்போம்.

அலகு 5

| | | |
|---|---|---|
| கோபால் | : | ஐயா, கூடைப்பந்து விளையாட்டில் பயன்படுத்தப்படும் பந்து ரப்பரால் ஆனது தானே? |
| உடற்பயிற்சி ஆசிரியர் | : | ஆமாம் கோபால், அது தோல், ரப்பர் அல்லது ரசாயனக் கலவையால் ஆக்கப்பட்ட பொருளால் மூடப்பட்டிருக்கும். பந்தின் எடை அறுநூறு கிராமில் இருந்து அறுநூற்றைம்பது கிராம் வரை மட்டும் இருக்கலாம். சுற்றளவு எழுபத்தைந்து சென்டிமீட்டரிலிருந்து எழுபத்தெட்டு சென்டிமீட்டர்வரை இருக்க அனுமதி உண்டு. |
| ரகுமான் | : | ஓர் அணிக்கு எத்தனை பேர் ஆடலாம் ஐயா? |
| உடற்பயிற்சி ஆசிரியர் | : | ஐந்து பேர். அவர்களில் ஒருவர் கேப்டன். இவர்கள் தவிர, ஒவ்வொரு அணியிலும் ஏழு மாற்று ஆட்டக்காரர்கள் இருக்க அனுமதி உண்டு. |
| சேவியர் | : | எத்தனை முறை ஓர் அணி கூடைக்குள் பந்தை எறிகிறதோ, அத்தனைப் புள்ளிகள் இல்லையா ஐயா? |
| உடற்பயிற்சிஆசிரியர் | : | இல்லை சேவியர், பந்து முறையாக எறியப்பட்டு, பந்து வளையத்துக்குள் நுழைந்து, வலையில் விழுந்து வெளி வரும் போது கோல் போட்டதாகப் பொருள். ஆட்ட நேரத்தில் இப்படி கோல் போட்டால், அதற்கு இரண்டு புள்ளிகள். மைதானத்தில் 6.25 மீட்டர் ஆரத்தில் ஓர் அரை வட்டக்கோடு வரையப்பட்டிருக்கும். அதற்கப்பாலிருந்து பந்தை எறிந்து கோல் போட்டால், அதற்கு மூன்று புள்ளிகள். தடையில்லா (ஃப்ரீ த்ரோ) மூலம் வளையத்திற்குள் விழுகிற பந்துக்கு ஒரு புள்ளி. |
| தேன்மொழி | : | பந்து வளையத்திலிருந்து கீழே விழுவதற்குப் பதிலாக, அடிப்பாகத்தில் நுழைந்து மேல்புறமாக வந்து விட்டால் புள்ளிகள் உண்டா சார்? |
| உடற்பயிற்சிஆசிரியர் | : | நன்றாகக் கேட்டாய், அப்படி வந்தால் அந்தப் பந்து இறந்து விட்டதாகக் கருதப்படும். அதற்கு மிக அருகிலுள்ள தனி எறி கோட்டிலிருந்து மீண்டும் ஆட்டம் தொடங்கும். |
| ரகுமான் | : | கூடைக்குள் பந்தை எறிவதுதான் இந்த விளையாட்டின் நோக்கம் இல்லையா ஐயா. |

உடற்பயிற்சிஆசிரியர் : அது ஒரு நோக்கம், எதிரணி, தங்கள் பகுதிக்கான கூடைக்குள் பந்தை எறிந்து விடாமல் தடுப்பது மற்று ஒரு நோக்கம். இந்த நோக்கங்களுக்காகப் பந்தை எறியலாம், வழங்கலாம், தட்டலாம், உருட்டலாம்.

சேவியர் : ஆகப் பந்தை என்ன வேண்டுமானாலும் செய்யலாம், இல்லையா?

உடற்பயிற்சிஆசிரியர் : அதெப்படி? பந்தைக் கைகளால்தான் கையாள வேண்டும். பந்தை உதைப்பது, முட்டியால் அடிப்பது, குத்துவது இதற் கெல்லாம் அனுமதி கிடையாது. தண்டனைதான் உண்டு.

தேன்மொழி : சுற்றிலும் எதிரணியைச் சேர்ந்தவர்கள் சூழ்ந்து கொண்டி ருக்கும் போது கையில் பந்தோடு இருப்பவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் போய்விடும் சரி தானே ஐயா?

உடற்பயிற்சிஆசிரியர் : அப்படிப் போகக்கூடாது தன் கையில் பந்து வந்து ஐந்து நொடிக்குள் அதைக் கொண்டு ஏதாவதொரு இயக்கத்தை அவர் செய்தாக வேண்டும். அதாவது எறிய வேண்டும் அல்லது வழங்க வேண்டும். இல்லையென்றால் தண்டனை. அதேபோல் முப்பது நொடி விதி ஒன்றும் உண்டு. எந்த அணியும் தொடர்ந்து ரொம்ப நேரத்துக்குப் பந்தைத் தங் களுக்குள்ளாக வழங்கிக் கொண்டு இருக்கக்கூடாது. முப் பது நொடிகளுக்குள் அதை வளையத்துக்குள் போட முயற் சிக்க வேண்டும். இல்லையென்றால், இந்த விதி மீறப்பட்ட இடத்துக்கு அருகே பந்தை உள்ளெறியும் வாய்ப்பு எதிர ணிக்கு அளிக்கப்படும்.

ரகுமான் : ஆக இந்த வளையம் என்பது கூடைப்பந்து விளையாட்டில் மிக முக்கியமானது அப்படித்தானே ஐயா?

உடற்பயிற்சிஆசிரியர் : சந்தேகமென்ன! இரும்பு வளையத்தின் உட்புற விட்டம் நாற்பத்தைந்து சென்டிமீட்டர் இருக்க வேண்டும். வளையத்துக்குள் ஆரஞ்சு வண்ணப் பூச்சு பூசப் பட்டிருக்கும். வளையத்திலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும் வலையின் நீளம் நாற்பது சென்டிமீட்டர்.

கோபால் : ஆட்ட நேரம் என்பது எவ்வளவு ஐயா?

உடற்பயிற்சிஆசிரியர் : இருபது, இருபது நிமிடங்கள் என இரண்டு ஆடும் நேரப்பகுதிகள். நடுவே, பத்து நிமிட இடைவெளி.

தேன்மொழி : இரண்டு கூடைகளில் எது யாருக்கானது என்பதை டாஸ்போட்டுத் தீர்மானிப்பார்கள் சரியா?

உடற்பயிற்சிஆசிரியர் : பாதிதான் கரெக்ட். வெளியூர் குழு தாங்கள் ஆட விரும்பும் வளையத்தைத் தேர்ந்தெடுக்கலாம். இரு அணி களுக்குமே அது பொதுவான மைதானம் என்றால், நாணயத்தைச் சுண்டி விட்டுத்தான் இதைத் தீர்மானிப் பார்கள். இரண்டாவது ஆட்ட நேரத்தில் குழுக்கள் தங்கள் ஆடுகளப் பக்கங்களை மாற்றிக் கொள்ளும்

ரகுமான் : எப்போதிலிருந்து ஆட்டம் தொடங்கியதாகக் கொள்ளப்படும்?

உடற்பயிற்சிஆசிரியர் : எதிரெதிர்க் குழுவைச் சேர்ந்த ஆட்டக்காரர்கள் இரண்டு பேர் மைதானத்தின் மைய வட்டத்துக்குள் நிற்பார்கள். நடுவர் அவர்களுக்கு மேலாகப் பந்தை உயர்த்தி எறிவார். பந்து உயரே சென்று பின் கீழ்வரும் நிலையில் அந்த இருவருமே பந்தைக் கூடையுள்ள திசையை நோக்கி அடிப்பார்கள். அப்போதிலிருந்து தான் ஆட்ட நேரம் தொடங்கியதாகப் பொருள்

கோபால் : அந்த இரண்டு பேராலும் தட்டப்படாமல் பந்து கீழே விழுந்து விட்டால் ?

உடற்பயிற்சிஆசிரியர் : மீண்டும் அதே இடத்தில் அதே முறையில் நடுவர் பந்தை எறிய, ஆட்டம் தொடங்கும். நடுவர் இப்படிப் பந்தை மேலே எறிந்ததும் ஆட்டக்காரர்கள் இரண்டு விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும்.

தேன்மொழி : அந்த இரண்டு என்ன சீக்கிரமாக சொல்லுங்கள்... ஐயா...

உடற்பயிற்சிஆசிரியர் : பந்து உச்சத்தில் எறியப்பட்ட பிறகும் தட்டப்படாமல் இருக்கும் போது மைய வட்டத்தை விட்டு இரு ஆட்டக்காரர்களும் வெளியே வரக்கூடாது. அதேபோல், இந்த இருவரைத் தவிர வேறெந்த விளையாட்டு வீரரும் வட்டத்துக்குள் நுழையக் கூடாது.

சேவியர் : ஒய்வுநேரம் வேறு இருக்கிறதே? அது எவ்வளவு ?

உடற்பயிற்சிஆசிரியர் : பத்து நிமிடம். ஆட்ட நேரத்தில் நடுவே உள்ள இந்த ஒய்வு நேரத்தில் பயிற்சியாளர், தனது ஆட்டக்காரர் களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் கூறலாம். ஆனால், பயிற்சியாளர் ஆடுகள எல்லைக்குள் வரக் கூடாது. ஆட்டக்காரர்கள் ஆடுகள எல்லையைவிட்டு வெளியே வரக்கூடாது

கோபால் : ஆட்ட இறுதியில் இரு அணிகளும் சம புள்ளிகள் எடுத்திருந்தால் என்ன செய்வார்கள் ஐயா?

உடற்பயிற்சிஆசிரியர் : ஐந்து நிமிடங்கள் மிகை நேரம் அளிக்கப்பட்டு ஆட்டம் தொடரும். அப்போதும் சமமான புள்ளிகள் என்றால், மீண்டும் ஐந்து நிமிட மிகை நேரம் என்று இது தொடரும்.

ரகுமான் : ஆட்ட நேரம் முடிந்து விட்டதாக விசில் ஊதப்பட்டு விட்டது. அதற்குள் பந்தை வீசிவிட்டேன். அந்தப் பந்து வளையத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் விசில் ஊதப்பட்ட பிறகு தான், அது வளையத் துக்குள் விழுகிறது. இதைக் கோலாகக் கணக்கில் எடுத்துக் கொள்வார்களா இல்லையா ஐயா?

உடற்பயிற்சிஆசிரியர் : கணக்கில் எடுத்துக் கொள்வார்கள்.

சேவியர் : ஒருவர் தவறு (ஃபௌல்) செய்வதாக எப்போது கருதப்படும்?

உடற்பயிற்சிஆசிரியர் : நன்றாகக் கேட்டாய் சேவியர். அது ஒரு நீளமான பட்டியல், இதோ, சில...

ஆட்ட நடுவரிடம் மரியாதை குறைவாக நடந்து கொள்வது, இழி மொழி பேசுவது, இழிவான சைகைகள் புரிவது, எதிராளியின் கண்ணருகில் கையை



அலகு 5

அசைத்துப் பார்வையைத் தடுப்பது போன்ற தொல்லைகள் தருவது, கூடையில் இருக்கும் இரும்பு வளையத்தைப் பற்றிப் பிடிப்பது ஆகியவை சில தவறுகள், ஐந்து முறை ஒருவர் தவறு செய்தால், அவர் வெளியேற்றப் படுவார். அவர் அணியைச் சேர்ந்த மாற்று விளையாட்டுக் காரர் ஒருவர், அவர் இடத்துக்கு வந்து சேருவார்.

தேன்மொழி : ஆக, ஒவ்வொரு விளையாட்டு வீரரும் நான்கு முறை தவறு செய்ய அனுமதி உண்டா?

ரகுமான் : ஆசை. ஆசை... ஒவ்வொரு தவறுக்கும் தண்டனை உண்டு. ஒவ்வொரு தவறுக்கும் இரண்டு தனி எறிகள் அனுமதிக்கப்படும். அப்படித்தானே ஐயா.

மாணவர்கள் : கூடைப்பந்து விளையாட்டு பற்றிய எல்லா விபரங்களையும் நன்றாகப் புரிய வைத்தீர்கள். மிக்க நன்றி ஐயா.

ஆசிரியர் : சரி மாணவர்களே! அடுத்த விளையாட்டு வகுப்பில் இந்த விளையாட்டை மைதானத்தில் விளையாடிப் பார்க்கலாம்.

மாணவர்கள் : சரி ஐயா!



**- நன்றி : சுட்டி விகடன்**



## செயல்பாடுகள்

**கலந்துரையாடி எழுதுவோம்...**

- உங்களுக்குத் தெரிந்த விளையாட்டுகளின் பெயர்களை எழுதுங்கள்.
- நீங்கள் விளையாடும் ஒரு விளையாட்டின் விதிமுறையை எழுதுங்கள்.
- விளையாட்டுகளில் சொல்லப்படும் ஆங்கிலச் சொற்களை எழுதி. அதற்கான சரியான தமிழ்ச் சொல்லைச் சொல்லகராதி பார்த்துக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கூடைப்பந்து விளையாட்டைப் பற்றித் தெரிந்துகொண்ட நீங்கள் உங்களுக்கு விருப்பமான வேறு எதாவது ஒரு விளையாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள ஓர் உடற்பயிற்சி ஆசிரியரிடம் உரையாடல் நடத்த வினாநிரல் தயாரிக்கவும்.

# சடுகுடு... சடுகுடு...

ஒத்தைக்கு ஒத்தைதான்
ஒரு பிள்ளை சிங்கந்தான்
அப்பா அம்மா ரெண்டு பேரும்
காட்டுமன்பு வெல்லந்தான்
வெல்லந்தான் வெல்லந்தான்
வெல்லந்தான் வெல்லந்தான்

கையிருக்குது காலிருக்குது
கடுமையான உழைப்பிலிருந்து
உழைப்பவரைச் சுரண்டுபவரை
உதைப்பதற்குத் துணிவிருக்குது
துணிவிருக்குது துணிவிருக்குது

திட்ட மிட்ட வாழ்வுதான்
இட்ட முடன் பாடுதான்
நேசநலம் காண்பதற்கு
ஆட்டந்தான் பாட்டுந்தான்
பாட்டுந்தான் பாட்டுந்தான்



புலி வாலினையும் புடிப்பேனடா
எமனையுமே ஜெயிப்பேனடா
சீமைத் துரைகளும் அஞ்சி நடுங்கிடும்
ஊமைத் துரையவன் நானேதானடா!
நானேதானடா! நானேதானடா!
நானேதானடா! நானேதானடா!

கட்ட பொம்மன் ஆவேனே!
பகத் சிங்கும் ஆவேனே!
ஜான்சிராணி வள்ளியம்மா
மங்கம்மா பரம்பரையே!
பரம்பரையே பரம்பரையே!

பாட்டுக்குமொரு பாட்டெடுப்பேனடா!
பாட்டனாரையும் தோற்கடிப்பேனடா!
நாட்டு நலத்தினை எண்ணி எண்ணியே
நாளும் பொழுதும் உழைப்பேனடா!
உழைப்பேனடா! உழைப்பேனடா!

**- சங்கை வேலவன்**



## செயல்பாடுகள்

### கலந்துரையாடி எழுதுவோம்.

- பாடலை இராகத்துடன் தனியாகவும், குழுவாகவும் பாடி மகிழுங்கள்.
- பாடலைப் படித்துச் சடுகுடு விளையாட்டு முறையைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- பாடலில் உங்களைக் கவர்ந்த வரிகள் எவை? ஏன்? எழுதுங்கள்.
- இதைப்போல விளையாட்டு தொடர்புடைய பாடல்களைத் தொகுத்து வெளியிடுங்கள்.
- இந்தப்பாடல் வரிகளை உரைநடை வடிவில் எழுதுங்கள்.

# சொல்லகராதி

**அ**

அகழ்வார் - தோண்டுபவர்
அகிலம் - உலகம்
அங்கம் - உறுப்பு
அஞ்சுதல் - பயப்படுதல்
அடிகள் - பாதங்கள்
அண்டுதல் - நெருங்குதல்
அண்மை - அருகில், பக்கத்தில்
அபிநயம் - நடித்தல்
அரம்பை - தேவலோகப்பெண்
அரியணை - அரசன் அமரும் இருக்கை, சிம்மாசனம்
அல்லல் - துன்பம்
அன்றாடம் - அனுதினம்

**ஆ**

ஆக்கங்கள் - நற்செயல்கள்
ஆடுகளம் - விளையாடும் இடம்
ஆரவாரம் - மகிழ்ச்சி

**இ**

இச்சை - ஆசை
இயன்ற - முடிந்த
இரப்போர் - இல்லாதோர்
இழுக்கு - துன்பம்
இன்மை - இல்லாமை
இன்றியமையாத - தவிர்க்க முடியாத

**ஈ**

ஈகை - கொடுத்தல்
ஈடில்லா - ஈடு இல்லாத
ஈர்க்கப்பட்டு - கவரப்பட்டு

**உ**

உவந்தேன் - மகிழ்ந்தேன்
உறவோர் - சுற்றத்தினர், உறவினர்

**எ**

எரி - எரித்தல், எரிச்சல்
எழில் - அழகு
என்பு - எலும்பு

**ஏ**

ஏற்றம் - உயர்வு

**ஐ**

ஐக்கியம் - ஒற்றுமை

**ஒ**

ஒப்புரவு - நற்குணம், நற்செயல்

**க**

கதிர் - நெற்கதிர், ஒளிக்கதிர்
கரங்கள் - கைகள்
கவியரங்கம் - கவிதை பாடும் இடம்
கழனி - வயல்
களிப்பு - மகிழ்ச்சி
களைப்பு - சோர்வு
கற்பகம் - விரும்பியதைத் தரும் மரம்
கன்று - குட்டி
கனவான் - மதிப்பிற்குரியவர்
கிள்ளை - கிளி
குமிழ் நகை - புன்சிரிப்பு
குருதி - இரத்தம்
கேடயம் - பாதுகாப்புக் கருவி
கொட்டில் - பாதுகாக்கும் இடம்
கொடைத்திறம் - கொடுக்கும் பண்பு
கொற்றவன் - மன்னன்
கோடாமை - வழுவாமை, தவறாமை

**ச**

சகம் - உலகம்
சங்கமம் - ஒன்று கலத்தல்
சன்மானம் - பரிசு, வெகுமதி

சான்றோர் - அறிவுடையோர்
சிருஷ்டிகள்- படைப்புகள்
சீதனம் - தாய் வீட்டுப் பரிசுப் பொருள்
சீர்மை - ஒழுங்கான, அழகான
சுந்தரம் - அழகு
செப்பம் - சரி (செய்தல்)
செறிவு - நெருக்கம்
சோகாப்பர் - துன்பப்படுவர்

**ஞ**

ஞாயிறு - சூரியன், கிழமை

**த**

தரிசித்தல் - வணங்குதல், பார்த்தல்
தனவந்தர் - பணக்காரர்
திகைப்பு - ஆச்சரியம்
திங்கள் - சந்திரன், கிழமை
திட்டவட்டமாக - மிகச் சரியாக
தீர்வு - முடிவு
துய்த்தல் - அனுபவித்தல்
துயர் - துன்பம்
தூரிகை - ஓவியம் வரையப் பயன்படும் வரை கருவி
தூற்றுதல் - இழிவு படுத்துதல்
தெங்கு - தென்னை

**ந**

நுங்கு - பனங்காயின் உள்ளே உள்ள இனிப்பான பகுதி
நுட்பம் - மிகச் சிறிய
நுழைபுலம் - செல்லும் வழி
நெகிழ்வு - கனிவு, தளர்வு

**ப**

பகைவர் - எதிரி
பட்டறிவு - அனுபவ அறிவு
பயிலரங்கம்- படிக்குமிடம்
பரவசம் - மிகுந்த இன்பம், பெருமகிழ்ச்சி
பவ்வியம் - பணிவு
பாங்கு - முறை
பார் - உலகம், பார்த்தல்
பிணி - நோய்
பீடுநடை - பெருமித நடை
புள்ளினம் - பறவை இனம்
புனல் - நீர்
பேணுதல் - பாதுகாத்தல்
பொலிவு - புத்துணர்வு
பொழிதல் - பெய்தல்

**ம**

மகப்பேறு - குழந்தைச் செல்வம்
மசகு - எண்ணெய்
மடி - மடித்தல், மடிப்பகுதி
மண்டு - முட்டாள்
மதி - அறிவு, சந்திரன்
மாண்பு - மதிப்பு
மாளட்டும் - அழியட்டும்
மிளிரட்டும் - ஒளிவீசட்டும்
முடம் - ஊனம்
மூதாட்டி - வயதானப் பெண்மணி
மேதினி - உலகம்
மைந்தர் - மக்கள்

**வ**

வயப்படுதல் - வசப்படுதல்
வர்ணக்கூட்டு - பலவித வண்ணங்களை கலவை செய்யும் விதம்
வலிமை - பலம்
வறண்டு - நீர் இன்றி
வன்மை - கடுமை
வினை - செயல், தொழில்